நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி: 422839, 434238

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6540 1990 மார்ச் 16 வெள்ளிக்கிழமை ★ ★ ★ தினபதி



தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO. 11.
Phone: 422839 434238

அரசாங்கக் கொள்கைப்படி

# இன விகிதாசார நியமனங்கள் இல்லையேல் அமைச்சர்கள் மீது நடவடிக்கை

## அமைச்சரவை முடிவு இது என்று ரஞ்சன் அறிவிப்பு

— இரா புத்திரசிகாமணி —

கொழும்பு, மார்ச் 15

**இன விகிதாசாரப்படி நியமனங்கள் வழங்கத் தவறும் அமைச்சர்கள், அதிகாரிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் தலைவர்கள் ஆகியோர் மீது கடும் நடவடிக்கை எடுத்து அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.**

இது அமைச்சரவையின் முடிவு என்று வெளிவிவகார அமைச்சரும பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன நேற்றுத் தாம நடத்திய பத்திரிகையாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார்.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும அரசாங்கம

துறை அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி, கைத்தொழில் அமைச்சர் திரு ரணில் விக்ரமசிங்க, தகவல் துறை ராஜாங்க அமைச்சர் திரு ஏ ஜே ரணசிங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க ஆகியோரும உடன் இருந்தனர்.

எல்லாத் துறைகளிலும இன

(4ஆம பக்கம பார்க்க)

## 5,500 ஜவான்களே

இப்போது இலங்கையில்

சோமண்ணை



உதெல்லாம சொல்லுறது சுலபம! செயலிலை காட்டிறதுதான் கடினம பாருங்கோ—

## எம்பிக்கள் உரை ஒழுங்காக பிரசுரமாக வேண்டும்

கொழும்பு மார்ச் 15

## பத்திரிகையாளர் தூக்கிலிடப்பட்டார்

பாக்தாத் மார்ச் 16

பிரிட்டிஷ் பத்திரிகையாளரான பர்ஸாத் பஸொப்ட் வியாழன்று ஈராக்கில் தூக்கிலிடப்பட்டார்—

அவருக்கு மன்னிப்பளிக்கும படி விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அலட்சியம செய்த ஈராக்கிய அதிகாரிகள் தூக்குத் தண்டனையை நிறைவேற்றி இருக்கின்றனர்—

இஸ்ரவேலுக்காகவும பிரிட்டனுக்காகவும உளவு பார்த்தார் என்று இவர் மீது குற்றம சாட்டப்பட்டிருந்தது— (ண—எ)

# திருமலை: கோட்டை சிங்கள அகதிகள் முகாம் மூடப்படும்

## அங்குள்ளவர்களை மீள குடியமர்த்த நடவடிக்கை என்கிறார் அமைச்சர் ரஞ்சன்

கொழும்பு மார்ச் 15

திருகோணமலை கோட்டை சிங்கள அகதிகள் முகாம மூடப்படும— அங்குள்ளவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான துரித நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும—

வெளிவிவகார அமைச்சரும பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இதனைத் தெரிவித்தார்—

சிங்களவர்கள் 1983 ஆம ஆண்டு முதல் திருகோணமலை மாவட்டத்தில் அகதிகளாக தங்கியிருக்கின்றனர்— அவர்களை மீளக் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறதே என நிருபர்கள் அமைச்சரிடம கேட்டனர்— அதற்கு அமைச்சர் கூறியதாவது—

இது தவறு— அரசு பல்வேறு சமயங்களில் இவர்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளது—

ஆனால் அங்கு அகதிகளாக தங்கி இருப்பவர்கள் வெளியேற மறுத்து விட்டனர்— இவர்களுக்கு அரசு பல லட்ச ரூபாவை செலவிட்டு வருகிறது—

இதுமட்டுமின்றி தென் பகுதி ஜே வி பி தீவிரவாதிகளும பாதுகாப்புப் படையினரிடமிருந்து தப்ப அகதிகள் என்ற போர்வையில் அங்கு தஞ்சம அடைந்திருக்கின்றனர் எனவும தகவல் கிடைத்துள்ளது— இதனை அனுமதிக்க முடியாது—

இப்படி திரு ரஞ்சன் விஜேரத்ன கூறினார்— (ண—ய)

## ஜனநாயக பண்புகளை கடைப்பிடிப்பவர் பிரேமா

— ஜே ஆர்

பொதுநல நாடுகள் அமைப்பின் ஜனநாயக பண்புகளை உண்மையாகவே கடைப்பிடித்து வருபவர் ஜனாதிபதி பிரேமதாச என்பதை அவரது சொல்லும செயலும வெளி

யாற்றிய திரு ஜெயவர்த்தனா மேலும கூறியதாவது—

ஜனநாயகப் பண்புகளைக் கடைப்பிடித்து வரும தலைவர

தய பத்திரிகையாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார்.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றம அரசாங்கம பொறுப்பேற்ற நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு இன விகிதாசாரப்படியே நியமனங்களைச் செய்வது என்பது அரசாங்கத்தின் கொள்கை.

அரசாங்கக் கொள்கைக்கு எதிராக யார் செயற்பட்டாலும அவர் மீது கடும நடவடிக்கை எடுக்கப்படும என்று அமைச்சர் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உணவு விவசாய கூட்டுறவுத்

# 5,500 ஜவான்களே இப்போது இலங்கையில்

கொழும்பு, மார்ச்- 15

இப்பொழுது 5,500 இந்தியப் படையினர் மட்டுமே இங்கு இருக்கின்றனர்- இவர்கள் அனைவரும இன்னும சில தினங்களில் முற்றாக வெளியேறிவிடுவர்-

ஏற்கனவே அறிவித்தபடி இம மாதம 31ஆம திகதிக்கு முன் இந்தியப் படையினர் இலங்கையை விட்டு வெளியேறி விடுவார்களா என நிருபர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளித்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன மேற்கண்டவாறு கூறினார்-

திருகோணமலையில் 3000 முதல் 4,000 பேர் வரையிலும காங்கேசன் துறையில் 1,500 பேர் மட்டுமே இப்பொழுது இருக்கின்றனர்-

இவர்களும வெளியேறுவதற்கு மூட்டை முடிச்சுகளுடன் தயாராகவே இருக்கின்றனர்

(3 ஆம பக்கம பார்க்க)

# பிரசுரமாக வேண்டும்

## — சபாநாயகர்

கொழும்பு மார்ச் 15

நாடாளுமன்றத்தில் எம்பிக்கள் ஆற்றும உரைகள் ஒழுங்கான முறையில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட வேண்டும- பத்திரிகைகள் தொடர்ந்தும எனது வேண்டுகோளை அலட்சியம செய்து வருகின்றன-

சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகம்மது நேற்று நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்-

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9 மணிக்கு சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகம்மது தலைமையில் கூடியது-

அப்போது சபை முதல்வரும கைத்தொழில் அமைச்சருமான

(2 ஆம பக்கம பார்க்க)

உண்மையாகவும் கடைப்பிடித்து வருபவர் ஜனாதிபதி பிரேமதாச என்பதை அவரது சொல்லும செயலும வெளிக்காட்டி நிற்கின்றன-

இப்படி முன்னாள் ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா கூறினார்-

றோயல் பொதுநல சமூக கூட்டம நேற்று முன்தினம கொழும்பு தப்ரபேன் ஹோட்டலில் நடைபெற்றது- அங்கு உரையாற்றிய திரு ஜெயவர்த்தனா மேலும கூறியதாவது-

ஜனநாயகப் பண்புகளைக் கடைப்பிடித்து வரும் சகலரும

(4ஆம பக்கம பார்க்க)

# புத்தளத்தில் ஜனாதிபதி செயலகம்

புத்தளம மார்ச் 15

மூன்றாவது நடமாடும ஜனாதிபதி செயலகம இன்று முதல் மூன்று தினங்களுக்கு புத்தளம நகரில் இயங்கும-

புத்தளம சென் அன்ரூஸ் கல்லூரியில் இயங்கும இந்த நடமாடும செயலகத்தில் ஜனாதிபதி

(4ஆம பக்கம பார்க்க)

# இந்தியா சென்ற படகுடன் 3 இலங்கையர்கள் கைது

மூன்று இலங்கையருடன் இந்தியா நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு ஒன்றை இலங்கை கடற்படையினர் கைப்பற்றினர்- கண்ணாடி நூலிழையினால் ஆன இந்த படகை சோதனையிட்ட கடற்படையினர் 3 தங்கக்கட்டிகளை (பிஸ்கட்ஸ்) கண்டு பிடித்தனர்-

நேற்று அரசு விடுத்த அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது- மேலும அந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டிருக்கும சம்பவங்கள் வருமாறு-

காலியில் இனந்தெரியாத இரு

(4ஆம பக்கம பார்க்க)

# போதைப் பொருள் ஒழிப்பு திட்டம் வகுக்கப்படும்

கொழும்பு, மார்ச்- 15

போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கு தேசிய ரீதியிலான பொது கொள்கைத் திட்டம ஒன்று வகுக்கப்படும-

போதைப்பொருட் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு கடூழிய தண்டனையுடன் சொத்துக்களும பறிமுதல் செய்யப்படும

அமைச்சரவை கூட்டத்தில்

(4ஆம பக்கம பார்க்க)

# வரதராஜப்பெருமாள் மொரிசியசில் என தகவல்

கொழும்பு, மார்ச்- 15

வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு வரதராஜப் பெருமாள் இப்போது மொரீஸியஸில் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது என வெளிவிவகார அமைச்சரும பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன கூறினார்-

எமது வேண்டுகோளை ஏற்று தமிழக முதல்வர் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு பாதுகாப்பு அளிக்க மறுத்துவிட்டார்- அதற்கு மீண்டும நன்றி செலுத்தக் கடமைப்

(4ஆம பக்கம பார்க்க)

# நிறைவேற்று ஜனாதிபதி ஆக கொர்பசசேவ் தெரிவு

மாஸ்கோ மார்ச் 15

சோவியத் யூனியனின் நிறைவேற்று அதிகாரம கொண்ட ஜனாதிபதியாக மிக்காயல் கொர்பச்சேவ் தெரிவானார்

வியாழன் நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பொன்றின் பின்னர் கொர்பச்சேவ் உடனடியாக சத்தியப்பிரமாணம எடுத்துக் கொண்டார்-

மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசில் இரகசிய வாக்கெடுப்பு நடந்தது- 1,329 கொர்பச்சேவுக்கு ஆதரவாக வாக்குகளும எதிராக 495 வாக்குகளும அளிக்கப்பட்டன- (எ)

## வடக்கு கிழக்கு மா. சபை விவகாரம்

# சட்ட மாஅதிபரின் ஆலோசனை எதிர்பார்ப்பு

கொழும்பு மார்ச் 15

வடக்கு, கிழக்கு மாகாண சபை கலைப்பு தொடர்பாக அரசாங்கம சட்ட மா அதிபரின் ஆலோசனையை எதிர்பார்த்திருக்கிறது- மாகாண ஆளுநர் நளின் செனிவிரத்ன இது தொடர்பான ஆலோசனைகளை நடத்தி வருகிறார்-

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதில் அளிக்கும போது இப்படிச் சொன்னார்-

வடக்கு கிழக்கு மாகாண முதல்

(4ஆம பக்கம பார்க்க)

# 20 விடயங்கள் தொடர்பாக ஆகஸ்ட் முடிவதற்குள் முடிவு

## சர்வகட்சி மாநாட்டுபிரதிநிதிகள் குழுதீர்மானம்

கொழும்பு மார்ச் 15

20 விடயங்கள் சம்பந்தமாக ஆகஸ்ட் மாதம முடிவடைவதற்குள் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது என சர்வகட்சி மாநாட்டின் பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம தீர்மானித்தது-

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவின் தலைமையில் குழுவின் முதலாவது கூட்டம நேற்று முன்தினம ஜனாதிபதி செயலகத்தில் கூடியது-

கடந்த சர்வகட்சி மாநாட்டின் போது சகல கட்சிகளும ஒன்று சேர்ந்து தீர்வு காணப்பட வேண்டும என 13 விடயங்கள் குறிப்பிடப்பட்டன-

இளைஞர் அமைதியின்மை தொடர்பான ஆணைக் குழுவின் சிபார்சுகளில் 7 சிபார்சுகளும சகல கட்சிகளும ஒன்று சேர்ந்து தீர்வு காணப்பட வேண்டும என

(3 ஆம பக்கம பார்க்க)

# பலாலி இந். முகாம்கள் படிப்படியாக நீக்கம்

கொழும்பு மார்ச் 15

பலாலி விமான நிலையத்திலும அதன் சுற்றுப்புறங்களிலும முகாமிட்டிருந்த இந்தியப் படையினர் தமது முகாமகளை படிப்படியாக அகற்றி வருகின்றனர்-

இந்திய படையின் உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலை தினபதிக்கு தெரிவித்தார்-

இந்தியப் படையினரின் வாகனங்கள் யுத்த தாங்கிகள், ஹெலிகொப்டர்கள் போன்றவற்றை ஏற்றிச் செல்வதற்காக இந்தியாவின் பாரிய விமானம ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது-

"கஜராஜ் ஏ 76" என்ற இந்த இராட்சத விமானம தினசரி

(4ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

கொழும்பு துறைமுகத்தில் தேங்கி கிடக்கும்

# விஷக் கழிவுகள் அழிப்பு:

# சூழல் மாசடையுமா?

## பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன

கொழும்பு, மார்ச்- 15

கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் 190 தொன்களுக்கும் மேற்பட்ட விஷக் கழிவுப் பொருட்களை அழிக்கும் போது சூழல் மாசடையுமா? இல்லையா என்பதில் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன-

இவ் விஷக் கழிவுப் பொருட்கள் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அதி வெப்ப சூழ்நிலையின் கீழ் எரிக்கப்படவிருப்பதால் சூழல் மாசடையாது-

மத்திய சூழல் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் எச் ஏ ரணவீர இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்-

ஆனால் சூழல் விஞ்ஞானிகள் எதிர்மாறான கருத்துக்களை தெரிவித்துள்ளனர்-

இவ் விஷக் கழிவுப் பொருட்கள் கொழும்பில் இருந்து சுமார் மப்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மீப்பே என்ற இடத்தில் எரிக்கப்படும்-

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் கிளை நிறுவன தொழிற்சாலையில் உள்ள மிகச் சக்திவாய்ந்த சூளைகளிலேயே இக் கழிவுகள் எரிக்கப்படவுள்ளன-

இத் தொழிற்சாலை கொழும்பு நகருக்குக் குடிதண்ணீர் வழங்கும் லபுகம நீர்த்தேக்கத்தில் இருந்து எட்டு கிலோ மீட்டர் களுக்குக் குறைவான தூரத்திலேயே அமைந்துள்ளது

விஷக் கழிவுகள் எரிக்கப்படும் போது அவற்றில் காணப்படும் அபாயகரமான ரசாயனப் பொருட்கள் வெளியேறினால் லபுகம நீர்த்தேக்கம் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய அபாயம் உள்ளது-

இவ்வாறு சூழல் பவுண்டேஷன் நிறுவனம் என்ற அமைப்பின் தலைவர் ரவி அலுகம் சுட்டிக்காட்டியுள்ளார்-

விஷக் கழிவுகள் எரிக்கப்படும் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற வாதத்தைச் சுட்டிக்காட்டிய அவர், இவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடுகள் சூழல் மாசடைவதைத் தடுக்கப் போவதில்லை என்று தன் கருத்தைத் தெரிவித்துள்ளார்-

எவ்வளவு முன்னேற்பாடுகள் ...

நீரில் கலந்தும் வேறு வழிகளிலும் இவை சூழலை மாசுபடுத்துவதை முற்றாகத் தடுக்க முடியும் என எவராலும் உறுதியளிக்க முடியாது-

இந் நச்சுப் பொருட்களை அழிக்க உபயோகப்படுத்தப்படும் தண்ணீர் வெளியேறும் போது லபுகம நீர்த் தேக்கம் பாதிப்பு அடையக் கூடும்-

மேலும் மீப்பே பகுதியில் காலநிலை அடிக்கடி மாறி மழை பெய்யக்கூடும்- இக் காலநிலை மாற்றத்தையும் சம்பந்தப்பட்டோர் கவனத்தில் எடுத்துக் கொண்ட பின்னரே கழிவுகள் எரிக்கப்பட வேண்டும்-

இப்படி அவர் தனது கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார்-

இதேவேளை நச்சு ரசாயனக் கழிவுகள் நிலத்துக்கு அடியில் செல்லுமானால் அப் பகுதி நச்சுத் தன்மையடையும் என சூழல் விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்-

ஆனால் விஞ்ஞான கைத்தொழில் ஆய்வுகளுக்கான நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ எம் முபாரக் இக் கழிவுப் பொருட்கள் எரிக்கப்படுவதால் சூழல் மாசடையும் என்பதை மறுத்துள்ளார்-

அதியுயர் டிகிரி பாரன்ஹீட் வெப்பத்தில் இவை எரிக்கப்படவிருப்பதால் நச்சுப் பொருட்கள் உருவாவதற்கில்லை-

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் சூழல் மாசடையாது-

மேலும் நச்சுக் கழிவுகளை பெரும் செலவில் மீண்டும் ஏற்றுமதி செய்வதை விட அவற்றை உள்நாட்டிலேயே அழித்தொழிப்பது லாபகரமானது-

முதல் தடவையாக இவ்வாறான ஒரு நடவடிக்கை உள்நாட்டில் இப்போதுதான் பரீட்சார்த்த ரீதியாக நடத்தப்படவிருக்கிறது-

இப்படி தெரிவித்துள்ள அவர் ...

பசளையான இப் பொருள் டயாசினன் என அடையாளம் காணப்பட்டுள்ளது-

இப் பொருளை இறக்குமதி செய்தவர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் எனத் தெரியவந்துள்ளது-

(ந-032)

## பிறந்த நாள் வாழ்த்து



றுஹைல் முஸ்தபா

காத்தான்குடி-3, ஹிஜ்ரா ஒழுங்கையைச் சேர்ந்த எம ஐ எம முஸ்தபா (கிளை முகாமையாளர் ப நோ கூ சங்கம்) — ஜெஸீமா பீபீ தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் "றுஹைல் முஸ்தபா" இன்று (16-3-1990) முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்-

இவரை அல்லாஹ்வின் அருளுடன் சகல செல்வங்களும் சுக வாழ்வும் பெற்று வாழ வாப்பா, உம்மா, றுமைஸ் நானா, மூத்த வாப்பா, ஏ எம மீராசாஹிப் (ஜாமிஅத்துல் பலாஹ்), மூத்த உம்மா, வாப்பாவாப்பா, எஸ் எல் எம இப்ராஹீம (பிரதேச சபை), வாப்பம்மா மற்றும் குடும்பத்தினர், நண்பர்கள் வாழ்த்துகி...

ஆறுமுகநாவலர் கட்டுரை போட்டி!

## பரிசளிப்பு விழா

கொழும்பு, மார்ச்- 15

யாழ்ப்பாணம் விவேகானந்த சபை நடத்திய பாடசாலை மாணவ மாணவிகளுக்கான ஆறுமுகநாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்-

நிகழ்ச்சிகள் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும்-

யாழ் மாவட்ட நீதிபதி திரு பொ பாலசுப்ரமணியம் விழாவுக்கு தலைமை தாங்குவார்-

(ந)

## எம். பி கள்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

திரு ரணில் விக்கிரமசிங்கா தான் நேற்று முன்தினம ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி ஆற்றிய உரை ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்று கூறி சிறப்புரிமை மீறல் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்-

பௌத்த சாசன நிதியம சட்டவரைவு மீது எதிர்க்கட்சிகள் சார்பில் கொண்டு வந்த திருத்தம ஒன்றில் அரசாங்கம தோல்வி அடைந்து விட்டது என நான் கூறியதாக அந்த ஆங்கிலப் பத்திரிகை பிழையாக செய்தி பிரசுரித்துள்ளது- இதனை சபாநாயகர் கவனிக்க வேண்டும என அவர் தெரிவித்தார்

திரு ரணில் விக்கிரமசிங்கா எழுப்பிய சிறப்புரிமை மீறல் பிரச்சினைக்கு பதில் அளிக்கும போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்- அவர் மேலும கூறியதாவது-

சமபந்தப்பட்ட பத்திரிகையை பற்றி எனக்கு பல பேர் குறை கூறி இருக்கின்றனர்- இன்றும அப்படி நடந்திருக்கிறது- நான் முன்பும பத்திரிகையாளர்களை அழைத்து பேசி இருக்கிறேன்

நான் விடுத்த வேண்டுகோள்கள் தொடர்ந்தும அலட்சியம செய்யப்படுகின்றன- நான் பத்திரிகையாளர்களுடன் கடுமையாக நடப்பதில்லை- அதுதான் காரணம போல் தெரிகிறது-

இது தொடர்பாக நான் பத்திரிகையாளர்களுடன் மனந் திறந்து சுமுகமான பேச்சு நடத்துவேன்-

இவ்வாறு சபாநாயகர் கூறினார்- (ஊ—கு)

ஜனாதிபதி நடமாடும் சேவை

# மக்கள் நன்மை கருதி பல மகஜர்கள்

## ஸ்ரீ. ல. முஸ். காங்கிரஸ் சமர்ப்பிக்கும்

புத்தளம, மார்ச் 14

எதிர்வரும வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் புத்தளம பகுதியில் ஜனாதிபதி நடமாடும் செயலகம நடைபெறும போது அப்பகுதி மக்களின் நன்மை கருதி கீழ் வரும விடயங்களை ஸ்ரீ லங்கா முஸ்லிம காங்கிரஸ் மத்திய குழு ஜனாதிபதியிடம சமர்ப்பிக்க இருக்கின்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம காங்கிரஸ் தவிசாளர் ஜனாப் எம எச் சேகு இஸ்ஸதீன் தலைமையில் ஜனாப் எஸ் எம அபூபக்கர், ஜனாப் எம எல் ஏ எம ஹிஸ்புல்லா, ஜனாப் ஏ ஆர் அப்துர் ரஹூர், ஜனாப் ஐ எம இல்யாஸ் ஆகியோர் ஜனாதிபதியை சந்திப்பர்.

ஜனாதிபதியிடம சமர்ப்பிக்க இருக்கும விடயங்கள்.

* விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் மூலம புத்தளம பகுதி மக்கள் தங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்து விட்டனர். இப்பகுதி முஸ்லிம மக்கள் தங்களின் குரலை நாடாளுமன்றத்தில் ஒலிக்கச் செய்ய ஒரு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம கிடைப்பதற்கு ஜனாதிபதி உத்தரவாதம அளித்தல் வேண்டும.

* கல்பிட்டி, கரைத்தீவு ஆகிய பகுதிகள் சிங்கள உதவி அரசாங்க அதிபர் பகுதிகளுடன் இணைக்கப்பட்டிருப்பதால் இப்பகுதியில் வாழும தமிழ் பேசும மக்கள் தங்களின் தேவைகளை அங்கு சென்று முடிப்பதில் பெரும பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள்.

ஆகவே மேற்குறிப்பிட்ட இவ்விரு பகுதிகளுக்கும இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் வழங்கப்படுவதுடன் தமிழ் பேசும உதவி அரசாங்க அதிபர்களும நியமிக்கப்பட வேண்டும. அத்தோடு இப்பகுதிகளில் உள்ள அரச அலுவலகங்களிலும தமிழ் பேசும அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும.

* புத்தளப் பகுதி மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு பொலீஸ் நிலையங்களில் தமிழ் பேசும பொலீஸ் அதிகாரிகளை நியமிக்க வேண்டும.

* காணி பகிர்வு அந்தந்தப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு விகிதாசார அடிப்படையில் வழங்க வேண்டும.

* புத்தளத்தில் அமைந்திருக்கும சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் அப்பகுதி மக்களுக்கு விகிதாசார அடிப்படையில் தொழில் வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும.

* புத்தளம பகுதியிலுள்ள முஸ்லிம பாடசாலைக்கு நிதி உதவிகள் வழங்க வேண்டும. புதிய நீர்ப்பாசனத் திட்டம ஒன்று அமைக்கப்பட வேண்டும

* புத்தளம கற்பிட்டியிலே தான் அதிக அளவில் காகிதம உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இங்கு இயற்கையான துறைமுகமாக அமைந்திருப்பதால் அதனை கப்பல் துறைமுகமாக பயன்படுத்த வேண்டும. 2ந-ந)

## கல்வி, கலாசார அலுவல்கள் தகவற் றுறை அமைச்சு

## ஆசிரிய கல்வி பாடநெறிகள் பயிலுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுதல் - 1990

என் 191

கீழ்காணும பயிற்சிநெறிகளில் பயில்வதற்காக ஆசிரிய கல்லூரிகளில் மேலும எஞ்சியுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவ்வுப் பாடநெறிகளுக்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் நியமனம பெற்று கடமை ஏற்ற பட்டதாரிகள் அல்லாத ஆசிரிய/ஆசிரியைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன-

## இன்றைய திரைகளில்

8 வது வாரம

கெப்பிட்டல்

(கொழும்பு)

(ஜாமிஅத்துல் பலாஹ்), மூத்த உம்மா, வாப்பா,வாப்பா, எஸ் எல் எம இப்ராஹீம (பிரதேச சபை), வாப்பமமா மற்றும குடும பத்தினர், நண்பர்கள் வாழ்த்துகிறார்கள்-

## மத மாற்றமும பெயர் மாற்றமும

ஹுனுப்பிடிய, வத்தளை, இல 376, நந்தன மாவத்தையைச் சேர்ந்த சுஜீவா சான்தனி ஆகிய நான் 06-11-89 முதல் புனித இஸ்லாம மதத்தை ஏற்று எனது பெயரை பாத்திமா சுலைஹா என்று மாற்றியுள்ளேன் எனவும எனது சகல ஆவணங்களிலும அவ்வாறே இனிமேல் கையொப்பம இடுவேன் எனவும இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும பொது மக்களுக்கும தெரிவித்துக் கொள்கிறேன்-

இப்படிக்கு,
பாத்திமா சுலைஹா

032662

## தினபதி சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கடுகஸ்தொடை முஸ்லிம சூழலில் பெரிய தபால் கந்தோர் அருகே பிரதான பாதை அருகே நீர், மின்சாரம சகல வசதிகளும உடைய 19½ பேர்ச்சஸ் காணி உடன விற்பனைக்கு உண்டு- பர்ச்சஸ விலை 19-500 ரூபா தொடர்பு கொள்ளவும்- டாக்டர் மொஹிடீன், மொடர்ன் கிளினிக், மடவளை பஸார்-

031694

பாதுகாப்பு ஏற்பாடுகள் சூழல் மாசடைவதைத் தடுக்கப் போவதில்லை என்ற தன் கருத்தைத் தெரிவித்துள்ளார்-

எவ்வளவு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டாலும் நச்சுப் பொருட்கள் வெளியேறுவதைத் தடுக்க முடியாது-

## மரண அறிவித்தல்



ஆர் சுந்தர்ராஜ்

கொழுமபு கொமபனி வீதியைச் சேர்ந்தவரும, என் நேசத்தின் அன்புக் கணவருமான ஆர் சுந்தர்ராஜ் 14-3-1990 புதன் கிழமை காலமானார்-

இவர் ரஞ்சிதம, அலெக்ஸான்டர், ஏர்னஸ்ட் புற்றிக், அல்பிரட் ஜோன், ஸ்டீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும அசோக் குமார், மேரி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்-

அன்னாரின் பூதவுடல் 17-3-1990 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு இலக்கம 56/23, கியூ ரோட், ஸ்லேவ் ஐலன்ட், (கொழுமபு-2) இல் இருந்து பொரளை கனத்தை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும என்பதை தெரிவித்துக் கொள்கிறோம-

— அல்பிரட் ஜோன்
(தினபதி, சிந்தாமணி)

ரில் பிரயோகதான் பரீட்சார்த்த ரீதியாக நடத்தப்படவிருக்கிறது-

இப்படி தெரிவிக்கின்ற இவர் இவ்வாறான நச்சுப் பொருள் அழிப்பு பணிகளின் அபத்தங்கள் தோன்றுவது அசாதாரணமான அபாயம இருக்கத்தான் செய்கிறது என்பதை ஒத்துக் கொண்டார்-

பாகிஸ்தானில் இருந்த ரொண்டான்களுக்கு முன்னர் இரசாயன செலுத்தப்பட்ட 13 கொள்கலன்களிலேயே இந் நச்சுக் கழிவுகள் உள்ளன-

மன்றாடர நெற்செய்கை

## இலங்கையின் பதில் இந்தியா எதிர்பார்க்கிறது

புதுடில்லி மார்ச் 15

இலஙகை, இந்திய நட்புறவு ஒப்பந்தம தொடர்பாக இலஙகையின் உத்தியோகபூர்வ பதிலை இந்தியா எதிர்பார்க்கிறது-

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு ஐ பி குஜ்ரால் இந்திய லோக சபையில் நேற்று இதனைத் தெரிவித்தார்-

இலஙகை, இந்திய நட்புறவு தொடர்பான நகல், கடந்த ஜனவரி 12 ஆம திகதி அனுப்பிவைக்கப்பட்டது- ஆனால் இதவரை இலஙகை இதற்கான பதிலை அறிவிக்கவில்லை- இந்தியா இந்த நட்புறவு நகல் தொடர்பான இலஙகையின் பதிலை எதிர்பார்க்கிறது-

இப்படி அமைச்சர் குஜ்ரால் மேலும தெரிவித்தார்-

இலஙகை, இந்திய சமாதான ஒப்பந்தம 1987 ஜூலை 29 ஆம திகதி கைச்சாத்திடப்பட்டமை தெரிந்ததே-

இச்செய்தியை அகில இந்திய வானொலி நேற்றுப் பிற்பகல் ஒலிபரப்பியது-

(ண-வு)

என் 191

கீழ்காணும பயிற்சிநெறிகளில் பயில்வதற்காக ஆசிரிய கல்லூரிகளில் மேலும எஞ்சியுள்ள வெற்றிடஙகளை நிரப்புவதற்கு அவ்வுப் பாடநெறிகளுக்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் நியமனம பெற்று கடமை ஏற்ற பட்டதாரிகள் அல்லாத ஆசிரிய/ஆசிரியைகளிடமிருந்து விண்ணப்பஙகள் கோரப்படுகின்றன-

| பாடநெறி | மொழி மூலம் | | |
|---|---|---|---|
| | சிஙகளம | தமிழ் | ஆஙகிலம |
| 1 ஆஙகிலம | — | — | 86-12-31 |
| 2 ஆரமபக்கல்வி | 89-04-30 | 88-12-31 | — |
| 3 கணிதம் | 88-3-31 | 88-12-31 | — |
| 4 விஞ்ஞானம | 88-12-31 | 88-12-31 | — |
| 5 விவசாயம | 84-12-31 | — | — |
| 6 மனையியல் | 85-12-31 | — | — |
| 7 கைப்பணி | 89-04-30 | — | — |
| 8 சிறப்புக் கல்வி | | | |
| அ செவிப்புலன் குறைந்த குழந்தைகளுக்கு (காது கேளாதோர்) | | | |
| ஆ கட்புலன் குறைந்த குழந்தைகளுக்கு (கண்பார்வை குறைந்த) | 89-04-30 | — | — |
| இ உளவாற்றல் குறைந்த குழந்தைகளுக்கு (நுண்ணறிவற்றோர்) | | | — |
| 9 நடனம | 89-04-30 | — | — |
| 10 சித்திரம | 89-04-30 | — | — |
| 11 சஙகீதம் (கீழைத்தேய) | 89-04-30 | — | — |
| 12 சஙகீதம (மேலைத்தேய) | 89-04-30 | — | — |
| 13 சிஙகளம் | 89-04-30 | — | — |
| 14 அரபு (மௌலவி) | — | 88-12-31 | — |
| 15 பௌத்த சமயம | 85-12-31 | — | — |
| 16 இஸ்லாம | — | 88-12-31 | — |
| 17 உரோமன் கத்தோலிக்கம | 89-04-30 | — | — |

நியமனம ஏற்றுக் கொண்ட திகதியில் பாடசாலையின் சமபவத்திரட்டுப் புத்தகக் குறிப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றின் மூலம. கடமை ஏற்பதற்கு முன்னர் முன்சேவைப் பயிற்சி தரப்பட்டிருப்பின் அதனை அச்சேவை காலத்திற்கான வழஙகப்பட்ட வரவு சான்றிதழ் மூலமும உறுதிப்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும-

விஞ்ஞானம. கணிதம. அஙகிலம. அழகியல். மனையியல். விவசாயம ஆகிய பாடஙகள் தொடர்பாக மாவட்ட ஆசிரிய நியமனம பெற்றவர்கள் தாஙகள் நியமனம் பெற்ற பாடத்திலேயே ஆசிரிய பயிற்சியைப் பெறுதல் வேண்டும- எனினும. சிறப்புக்கல்வி பாடநெறிகளுக்கும (கண்பார்வைக் குறைவு, காது கேட்காதோர். நுண்ணறிவற்றோர்) மேற்குறித்த சஙகீத பாடநெறிகளுக்கும எந்த ஓர் நியமனம பெற்ற ஆசிரியரும விண்ணப்பிக்கலாம-

மேலதிக விபரஙகள் ஆசிரிய கல்லூரிகள். கல்விக் கல்லூரிகள். பிரதேச/மாவட்ட கல்வித் திணைக்களஙகள். கோட்டக் கல்விக் காரியாலயஙகள், உப அரசாஙக அதிபர் காரியாலயஙகள் ஆகியவற்றில் பார்வையிடலாம-

விண்ணப்பஙகள் 1990-03-28 ஆம திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம அனுப்பி வைத்தல் வேண்டும-

கேர்ணல் வீ எஸ் குடலிகம
செயலாளர்,
கல்வி, கலாசார அலுவல்கள் தகவற்றுறை அமைச்சு

1990-03-13

8 வது வாரம
கெப்பிட்டல்
(கொழும்பு)
2-30, 6-00, 9-30
லிடோ
(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00
பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த
பூ...
பூவா
பூத்திருக்கு
(கலர்)

14 வது வாரம
ராஜா
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
செல்லமஹால்
(கொழும்பு)
2-30, 6-00, 9-30
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம)
ராதா - நதியா
நடித்த
ராஜாதி ராஜா
(கலர்)

15 வது வாரம
ஜெஸ்மா
(கிராண்ட்பாஸ்)
2-30, 6-00, 9-30
வெலிஙடன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30
துசித
(மோதரை)
10-15, 1-15, 3-30
கார்த்திக் — குஷ்பு
வி கே ராமசாமி
நடித்த
வருஷம் 16
(கலர்)

## கூட்டம் நடத்துவதற்கான தடை விரைவில் நீக்கப்படும்

— ரஞ்சன்

கொழும்பு மார்ச் 15

அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கான தடை இம்மாத இறுதி வரை தொடர்ந்து இருக்கும். கூடிய விரைவில் கூட்டங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படும்.

வெளிவிவகார அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இதனை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை சபை ஆரம்பத்தின் போது எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா விடுத்த கோரிக்கை ஒன்றிற்குப் பதில் அளிக்கும் வகையிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

கடந்த காலங்களில் நாசகார சக்திகளினால் ஏற்படுத்தப்பட்டிருந்த குழப்பநிலை காரணமாகவே பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

பொது மக்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் போதிய பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடனேயே இத்தடை விதிக்கப்பட்டிருந்தது. வேறு எந்த அரசியல் உள்நோக்கமும் இல்லை.

சர்வதேச மகளிர் தினம், யொவன்புர இளைஞர் அணி, கமஉதாவ என்பன தனிப்பட்ட ஒரு கட்சியின் நிகழ்ச்சி அல்ல. அவை தேசிய ரீதியான கொண்டாட்டங்கள். எல்லாக் கட்சியினரும் கலந்து கொண்டனர்.

வடபகுதியில் புலிகள் கூட்டங்களை நடத்துகின்றனர். அவற்றைக் கூட அரசியல் கூட்டம் என்று கூறமுடியாது.

இப்பொழுது நாட்டின் நிலைமைகள் சீரடைந்துள்ளன. இம்மாத இறுதி வரை மட்டுமே கூட்டங்களை நடத்துவதற்கான தடைகள் அமுலில் இருக்கும்.

அதன்பின் கூடிய விரைவில் அரசியல் கட்சிகள் கூட்டங்களை நடத்துவதற்கான அனுமதி வழங்கப்படும்.

இப்படி அமைச்சர் விஜேரத்ன கூறினார்.

(ல-ம)

## 20 விடயங்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் தீர்மானிக்கப்பட்டது.

இந்த 20 விடயங்கள் சம்பந்தமாகவே நேற்று முன்தினம் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்த 20 விடயங்களும் அரசமைப்பு திருத்தங்கள் ஜனநாயக செயல் முறையை பலப்படுத்துதல் மற்றும் சமூகப் பொருளாதார விடயங்கள் என்று 3 பிரிவுகளாக நேற்று முன்தினம் கூட்டத்தின் போது பிரிக்கப்பட்டன.

அந்த 20 விடயங்களில் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் — அனைவரினதும் பாது

## 5,500 ஜவான்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனது சகாவான இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு குஜ்ரால் இதற்கான உறுதியை முன்பு அளித்துள்ளார். இப்பொழுது அதனை செயல்படுத்தியுள்ளார். அவருக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

இப்பொழுது வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிவில், மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கை இராணுவமும் பொலிஸாரும் ஏற்று வருகின்றனர். திருகோணமலை நகரில் இருந்து இந்தியப் படையினர் முற்றாகவே வெளியேறிவிட்டனர் என்று அவர் சொன்னார்.

நீங்கள் இலங்கை இராணுவமும் பொலிஸாரும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பணியை ஏற்றுள்ளனர் என்று கூறுகின்றீர்கள்.

ஆனால் ஆயுதம் ஏந்திய புலிகள் அல்லவா அங்கே ரோந்து புரிகின்றனர் என ஒரு நிருபர் சுட்டிக்காட்டினார்.

ஆம்! அங்கே ஆயுதம் ஏந்திய புலிகள் நடமாடுகின்றனர் இதை இல்லை என்று மறைக்க நான் விரும்பவில்லை என்று கூறிய அமைச்சர் இதுபற்றி மேலும் எதுவும் கூற மறுத்து விட்டார்.

(ண-ய)

## கொழும்பிலிருந்து தலைமன்னார், மட்டு. ரயில் சேவைகள் திங்கள் முதல்

### அமைச்சர் மெண்டிஸ் தகவல்

கொழும்பு மார்ச் 15

அடுத்த திங்கட்கிழமை (19ஆம் திகதி) முதல் கொழும்பில் இருந்து தலைமன்னாருக்கும், மட்டக்களப்புக்கும் நேரடி ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படும்.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு விஜயபால மெண்டிஸ் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீ ல மு காங்கிரஸ் வன்னி மாவட்ட எம் பி ஜனாப் சுந்தரமூர்த்தி அபுபக்கர் இவ்விடயம் தொடர்பாக போக்குவரத்து அமைச்சரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இப்பொழுது நிலைமைகள் ஓரளவு சீரடைந்துள்ளன. யாழ்ப்பாணத்திற்கும், காங்கேசன் துறைக்கும் இரவு பகல் ரயில் சேவைகள் போதுமான அளவு நடத்தப்படுகின்றன.

எனினும் தலைமன்னாருக்கு ஒரு நேரடி ரயில் சேவைதானும் இல்லை. எனவே உடனடியாக தலைமன்னார் நேரடி ரயில் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாப் அபுபக்கர் அமைச்சரிடம் கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்தே எதிர்வரும் 19ஆம் திகதி முதல் கொழும்பில் இருந்து தலைமன்னாருக்கும், மட்டக்களப்புக்கும் நேரடி ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் உறுதி அளித்துள்ளார்.

(ல-ம)


ලංකා බැංකුව
இலங்கை வங்கி
BANK OF CEYLON

புடை உரிமைகளைப் பாதுகாத்தல் - அனைவரினதும பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும தகவல் தொடர்பு சாதனங்களின் சுதந்திரம ஆகிய விடயங்கள் எதிர்வரும ஏப்ரல் 3ஆம திகதி ஆராயப்படும என தீர்மானிக்குப் பட்டது-

ஏப்ரல் 3ஆம திகதி முதல் 5 ஆம திகதி வரையும 10ஆம திகதி முதல் 12ஆம திகதி வரையும ஏப்ரல் 17ஆம திகதி முதல் 20 ஆம திகதி வரையும சகல நாட்களிலும இந்தக் குழுகூடும ஏப்ரல் 7ஆம திகதியும கூடும-

அப்படி கூடும போது முனனுரிமை அடிப்படையில் ஒவ்வொரு விடயமும ஆராயப்படும-

அப்படி ஆராயும போது பொது இணக்கம காணப்படும விடயங்கள் பொது மக்கள் முன் வைக்கப்படும- பின்னர் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சகல கட்சிகளினதும இணக்கம காணப்படும-

இளைஞர் அமைதியின்மை தொடர்பான ஆணைக் குழுவின் அரசினால் ஏற்றுக் கொள்ளப் பட்ட சிபார்சுகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நேற்று முன்தினம கூட்டத்தில் தெரிவித்தார்-

19 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 38 பிரதிநிதிகள் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர்

அரசாங்க சார்பில் உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீதும - போக்குவரத்து அமைச்சர் திரு விஜேபால மெண்டிஸும கலந்து கொண்டனர்-

ஜனாதிபதியின் செயலாளர் திரு கே எச் ஜே விஜேதாச, சர்வகட்சி மாநாட்டின் செயலாளர் திரு பிரட்மன் வீரக்கோன் உட்பட பல சிரேஷ்ட அரசாங்க மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளும கலநது கொண்டனர்-

(ண-ற)



# திறமையைப் பாவித்துத் திரவியம் தேடீர்!
# கை கொடுத்து உதவ நாமிருக்கிறோம்!

நீங்கள் வசிக்கும் வட்டாரத்திலுள்ள வளங்களையும களங்களையும் வசதிகள் வாயப்புகளையும் உபயோகித்து. வருவாய தேட உங்களிடமுள்ள திறமையைப பயன்படுத்தினுல். ஒரு புது யுகம் உங்கள் வாழவிலும உதயமாகும் சுதந்திரமாகச் சுய தொழில் செயது நீங்கள் சுகமாக வாழலாம்

நீங்கள் செயயக் கூடிய சில சுய தொழில்கள் இதோ -

- சிறு கைத்தொழில், வர்த்தக முயற்சிகள்
- பல பயிர் விவசாய அபிவிருத்தி வேலைகளில் இயந்திரக் கருவிகளின் துணையுடன் ஈடுபடல்.
- கைபபணிப் பொருள்களின் தொழில்முறை உற்பத்தி.
- கால் நடை, கோழிப் பண்ணைகள் நடாத்தல்.
- நவீனமய கடற்றொழில், மீன்பிடித் துறை முயற்சிகள்.

மேற்குறித்த தொழில்துறை முயற்சிகளுக்கு நாம் நிதி உதவி வழங்குவோம் உங்கள் தொழில் விருத்திக்கான இயந்திரங்கள். கருவிகள். உபகரணங்கள். மூலப் பொருள்களை வாங்க இந்த நிதி உதவிகளைப பயன்படுத்தி. உங்கள் வாழ்க்கை வருவாயை வளம் பெறச் செய்யுங்கள்




திறமையினாலே வறுமையை ஒழிக்க நாம் வழங்கும் சேவை இது.

மேலும் விபரங்களுக்கு நாடுங்கள் உங்களின் கிட்டிய இலங்கை வங்கிக் கிளை

BANK OF CEYLON இலங்கை வங்கி

## இலங்கை வங்கி

வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் தேசத்தின் ஒளி விளக்கு

RJA 9748

தினபதி
தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613
— 1990 மார்ச் 16 —
சுடர் 18 கதிர் 4435

## தலைநகரில் வாகன போக்குவரத்து

தலைநகரில் சிறிது காலத்துக்கு முன்னர் இருந்த வாகனப் போக்குவரத்து நெரிசல் இப்போது இல்லை— எவ்வளவோ குறைந்து விட்டது—

மேலும் குறைப்பதற்கான வழிவகைகள் பற்றிச் சம்பந்தப்பட்டவர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்—

சமீபத்தில் போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சில் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது—

இந்த மாநாட்டில் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், ஏற்றுமதியாளர் கவுன்சில் தலைவர்கள், கப்பல் முகவர்கள், கொள்கலன் மற்றும் டிப்போச் சங்கத் தலைவர்களும் உயர் பொலீஸ் உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்து கொண்டார்கள்.

கொள்கலன்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களும் மற்றும் கனரக வாகனங்களும் காலை 7 மணியிலிருந்து 9 மணி வரையும், மாலையில் 4 மணியிலிருந்து 6 மணி வரையும் வீதிகளில் ஓடக் கூடாது என்று மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது—

கடந்த சில நாட்களாகக் காலையில் 10 மணி வரை கனரக வாகனங்களுக்கு இருந்த தடை இப்போது 9 மணி வரையாக்கப்பட்டிருக்கிறது—

கடைகள் திறக்கும் நேரத்தைக் காலை 10 மணியாக்கியும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கப் பெரிதும

# பகவான் நாமத்தை கேட்பதே புண்ணியம்

## தகுதியும் காலமும் வரும்போது மோட்சபாக்கியம் கிடைக்கும்

பகவன் நாம சங்கீர்த்தனம் என்பது அளவிலா புண்ணியத்தை அளிக்கவல்ல ஒரு பெரிய யாகம் போன்றது என்பார்கள்—

இதையும் விட சுலபமானது ஏதாவது உண்டா என்று கேட்பவர்களும் இருக்கிறார்களல்லவா? அவர்களுக்கும் "உண்டு" என்று பதில் சொல்லியிருக்கிறார்கள்—

அது தான் "சரவணம்" என்கிறது— அதாவது பகவன் நாமத்தையே பகவத் குணங்களையோ, பகவானுடைய சரித்திரங்களையோ, அவதார விசேஷங்களையோ, யாராவது சொல்லிக் கொண்டிருக்கும் போது அதை காது வழியாகக் கேட்டாலே போதும்— மகத்தான புண்ணியம் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்—

அது மட்டுமல்ல இவனுக்கு புண்ணியம் சேருவதோடு, இவனது எத்தனையோ தலைமுறை பித்ருக்கள் நற்கதியடைகிறார்கள் என்றும் பலன் சொல்லப்பட்டுள்ளது—

இப்படிப்பட்ட புராணங்களைக் கேட்கும் போதே விசேஷமான பலன்கள் உண்டு என்றால், நாம சங்கீர்த்தனம் செய்பவர்களுக்கு எவ்வளவு புண்ணியம் கிடைக்குமென்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு முறை "ஹரி" என்றாலே மோட்சம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது—

அப்படி ஒரே ஒருமுறை சொன்னாலே மோட்சம் கிடைக்கும் என்றால் பிறகு ஏன் சதா காலமும், பிரதி தினமும் சொல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள் என்று கேட்கலாம்—

— வைரம் ராஜகோபால் —

இது அந்தந்த பாத்திரத்தின் பகுதியைப் பொறுத்த விசயம்—

ஒருவன் தரமான விதையை வாங்கி வருகிறான்— அதை தன் நிலத்தில் மூன்று இடங்களில் விதைக்கிறான்—

ஒரு இடத்தில் அந்த விதை உடனேயே செழிப்பாக முளைத்து விடுகிறது—

மற்றொரு இடத்தில், சிறிது காலதாமதமாகி சுமாராக முளைக்கிறது—

மூன்றாவது இடத்தில் இன்னும் கொஞ்ச நாள் கழித்து முளைக்கிறது—

விதை ஒரே மாதிரியான உயர்ந்த ரகமானது தான்— ஆனால், அது விதைக்கப்பட்ட நிலத்தின் சாரத்துக்குத் தகுந்தபடி முன்னதாகவோ, தாமதமாகவோ முளைக்கிறது—

அதற்குத் தக்கபடி பலன் தருகிறது—

அதே போல உயர்ந்த வித்தான பகவன் நாமாவை நம் இதயத்தில் விதைக்கிறோம்—

நம் மனம் இதயம் எல்லாம் எந்த அளவுக்குப் பக்குவப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கு பலன் கிடைக்கும்—

மோட்சம் என்பது பெரிய பலன்— அந்த பலன் உடனே கிடைத்தாலும் கிடைக்கலாம் காலம் தாழ்த்தி கிடைத்தாலும் கிடைக்கலாம்—

அடுத்த ஜென்மத்திலும் கிடைக்கலாம்— ஆனால் கிடைக்காமல் போகாது என்றார்கள்—

கஜேந்திரனை முதலை பிடித்துக் கொண்டது யாரையெல்லாமோ உதவிக்கு அழைத்தான் யாரும் வரவில்லை—

கடைசியாக "நாராயணா" என்று தீனக்குரல் கொடுத்தான்— பகவான் ஓடி வந்தார்—

## வெள்ளி விருந்து

தன் சக்ராயுதத்தால் முதலில் முதலையை வதம் செய்து அதற்கு மோட்சம் கொடுத்தார்— பிறகு தான் கஜேந்திரனுக்கு மோட்சமளித்தார் ஏன்?

அந்த முதலை பூர்வ ஜென்மத்தில் ஒரு கந்தர்வன்— சாபத்தினால் முதலையானான்—

பகவன் நாமத்தைச் சொன்னவன் காலை நீ பிடித்துக் கொண்டிருக்கும் போது உனக்கு பகவான் நாமத்தைச் சொன்னால் விமோசனம் ஏற்படும் என்று சாபம்—

பாகவதோத்தமனான கஜேந்திரனுடைய காலை இவன் பிடித்துக் கொண்டிருந்ததால் முதலில் முதலைக்கு மோட்சம்— பிறகு பாகவதோத்தமனுக்கு மோட்சம்—

பகவான் நாமத்தைச் சொல்லும் பாகவதோத்தமர்களை விட அவர்களுக்குப் பணி விடை செய்தோ, அண்டியோ, அவர்களை விடாமல் பிடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு பெருமை அதிகம் என்று இந்த கஜேந்திர மோட்சத்துக்கு விளக்கம் கூறியுள்ளனர்—

அதனால் பகவன் நாமத்தை சொன்னோமே! பலனைக் காணவில்லையே என்று சந்தேகப்பட வேண்டாம்— நம்பிக்கை இழக்க வேண்டாம்—

விதையை விதைத்தாயிற்று காலம் வரும் போது அது முளைத்துப் பலனைக் கொடுக்கும்— அதற்காக அவசரப்பட வேண்டாம்—

தகுதியும், காலமும் வரும் போது கிடைக்கும்— அது கிடைக்கும் வரையில் அவனை விடாமலிருக்க வேண்டும்—

ஏதோ ஒரு சிலர் அப்படியிருந்து பயன் பெறுகிறார்கள்— நாமும் நம்பிக்கையோடு செய்து வருவோமே என்கிறார்கள்—

(ம–10)

# படுகொலைகளை திட்டமிட்ட

## பெரும்புள்ளிகள் தப்பிவிடாமல் நடவடிக்கை

நிட்டம்புவை வவுல்கெலே தோட்டத்தில் இடம் பெற்ற 12 பேரின் படுகொலை சம்பவத்தை திட்டமிட்ட "பெரும் புள்ளிகள்" நாட்டை விட்டுத் தப்பி ஓடாமல் இருக்க இரகசியப் பொலீஸார் நடவடிக்கை எடுத்தனர்—

இதன்படி பிரதான விமான நிலையங்களுக்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்—

இந்த படுகொலைச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் அதிகாலை வீரகுல பகுதியில் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

ஜீப் ஒன்றும் கைப்பற்றப்பட்டது—

கைது செய்யப்பட்ட நபரும் ஒரு பொலீஸ் அதிகாரியாவார் என்று இரகசிய பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன—

பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற 12 பேரின்

## ஒரிஸ்ஸாவில் அகதிகள்: அதிகாரிகள் அதிருப்தி

கொழும்பு மார்ச் 14

னர்— ஒரிஸ்ஸா சுகாதாரத்

## புத்தளத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு ஆர் பிரேமதாசா உட்பட 15 அமைச்சர்களும், மற்றும் ராஜாங்க அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் போன்றோரும் கலந்து கொள்வர்—

இந்த நடமாடும் ஜனாதிபதி செயலகச் சேவையை முன்னிட்டு புத்தளம் நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது— பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன—

இந்த செயலகத்துக்கு வரும் மக்களின் நலன்கருதி அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன—

தொடர்ந்து மூன்று தினங்களு

ஜனாதிபதியின் விஜயத்தை முன்னிட்டு இன்று முதல் புத்தளம் நகருக்கு சீரான நீர் விநியோகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது—

மணல் குன்று என்ற இடத்தில் இருந்து குடிதண்ணீர் புத்தளம் நகருக்கு வழங்கப்பட்டுள்ளது—

இக்குடிதண்ணீர் வழங்கல் திட்டத்திற்கு ஜனாதிபதி தனது விசேட நிதியத்தில் இருந்து 60 லட்சம் ரூபாவை வழங்கி இருக்கிறார்— இத்திட்டத்தின் மூலம் தினசரி மூன்று லட்சம் கலன் நீர் விநியோகிக்கப்படும்—

(ண–வ–ய–241)

## செய்தித் திரட்டு

### நூல்கள் அன்பளிப்பு

கட்டுகஸ்தோட்டை, மார்ச் 14

மக்கள் கலை இலக்கியப் பேரவை கண்டி கலைமகள் வித்தியாலயத்திற்கு சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது—

கவிஞர் கண்டி எம் இராமச்சந்திரனின் விடிவை நோக்கி, கவிதைகள் ஆகிய கவிதை நூல்களே அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

[ஐ—139]

### பற்றாக்குறை நீங்கியது

மூதூர், மார்ச் 14

திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற பயிலுநர் ஆசிரியர் நியமனங்களால் இம் மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை நீங்கியுள்ளது—

இதனால் பாடசாலை அதிபர்களும் பெற்றோரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்—

திருகோணமலை மாவட்டத்தில் 360 சிங்கள பயிலுநர் ஆசிரியர்களும் 279 தமிழ் பயிலுநர் ஆசிரியர்களும் 260 முஸ்லிம் பயிலுநர் ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்—

[ஐ— 01]

### மிருக வளர்ப்புத் திட்டம்

கல்முனை, மார்ச் 14

கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் மிருக வளர்ப்புத் திட்டத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது—

கிராம அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்—

மாணவர்களுக்கு மிருக வளர்ப்பில் அறிவையூட்டி ஊக்குவிப்பு வழங்கும் நோக்கமாகவே இக்கல்லூரியில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாக இதன் பொறுப்பாசிரியர் ஜனாப் ஐ எல் ஏ. மஜீட் தெரிவித்தார்—

[ஐ—281]

### பலாலி இந்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி விமான நிலையத்துக்கு வந்து போகிறது—

இந்திய படையினரின் வாக

அம் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கப் பெரிதும உதவியிருக்கிறது- மாநாட்டில் கலந்து கொண்ட அனை வரும இதை ஒப்புக் கொண் டார்கள்-

காலையில் பாட்சாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள் ஆகி யோரோடு வர்த்தக நிலையங் கள் மற்றும கடைகள் ஆகிய வற்றில் பணியாற்றுபவர் களும அங்கே பொருட்களை வாங்கச் செல்பவர்களும கிளம்பினால் எப்படி இருக் கும?

பல வருட கால அனுபவம இப்போது பல நல்ல ஏற்பாடு களைச் செய்யப் பெரிதும உதவுகிறது-

போக்குவரத்துப் பொலி ஸார் அதிக வாகனப் போக்கு வரத்துள்ள வீதிகளின் சுற்று வட்டங்களில் புதிய ஒழுங்கு களைச் செய்திருக்கிறார்கள்-

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு அவையும உத வுகின்றன-

சில வீதிகளில் இப் போதும அங்காங்கே தடை கள் உள்ளன- "ஸ்பீட் பிறேக் கர்" என்று சொல்லப்படும மேடுகளும இருக்கின்றன-

இவற்றையும முடிந்தவரையில் அகற்றினால் போக்குவரத்து தங்குதடையின்றி நடைபெறும என்று மாநாட்டில் ஆலோ சனை கூறப்பட்டிருக்கிறது-

அதுவும கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும-

சொத்தத்தில் கொழும்பில் இப்போது போக்குவரத்து முன்னரை விட எவ்வளவோ இலகுவாகி விட்டது-

அதற்குப் பொறுப்பானவர் கள் அனைவரும பாராட்டப் பட வேண்டியவர்கள் ஆவர்-

கொழும்பு மார்ச் 14

ஒரிஸ்ஸாவில் இலங்கை அகதிகள் குடியமர்த்தப்பட் டது தொடர்பாக அம்மாநில அரசாங்க அதிகாரிகள் அதிருப்தித் தெரிவித்துள்ள னர்-

பாரதப் பிரதமரின் வேண்டு கோளை ஏற்று இலங்கை அகதி களை ஏற்றுக் கொள்ள ஒரிஸ் ஸாவின் முதலமைச்சர் முடிவு செய்ததை சுட்டிக்காட்டியுள்ள இந்த அதிகாரிகள் இதற்கு முன் பாக தம்மிடமும் முதலமைச்சர் கலந்தாலோசித்து ஒரு முடிவை எடுத்திருக்கலாம என்று அபிப்பி ராயம் வெளியிட்டுள்ளனர்-

இப்படி ஒரிஸ்ஸா அரசாங்க அதிகாரிகள் வட்டாரங்களை மேற்கோள் காட்டி சென்னை யில் இருந்து வெளியாகும இந்த பத்திரிகை செய்தி வெளியிட் டுள்ளது-

ஒரிஸ்ஸாவின் மால்குங்ரி பகு தியில் இலங்கைத் தமிழ் அகதி கள் குடியமர்த்தப்பட்டுள்ள னர்- இப்பகுதியில் ஒரிஸ்ஸ நக்சல்பாரிகளும காணப்படு கின்றனர் என்று தெரிவிக்கப்படுகி றது- இதனால் பிரச்சினைகள் எழலாம என்றும ஒரிஸ்ஸா மாநில அரசாங்கத்திற்கு இலங்கை அகதிகள் மேலும ஒரு சுமையாக விளங்குவர் என் றும அரசஅதிகாரிகள் வட்டா ரம மேலும அபிப்பிராயம தெரி வித்துள்ளது-

இலங்கைத் தமிழ் அகதி களுக்கு இரண்டு மாதங்களுக்கு மட்டும இடமளிக்குமபடி இந் திய மத்திய அரசாங்கம ஒரிஸ் ஸாவைக் கேட்டுள்ளது- மேலும அகதிகள் குடியமர்த்தப் பட்டுள்ள மாவட்டத்தின் நிர் வாகச் செலவுக்கென மத்திய அரசாங்கம பத்து லட்ச இந் திய ரூபாவை ஒரிஸ்ஸாவுக்கு வழங்கியுள்ளது-

இலங்கை அகதிகள் தமது முகாமகளுக்கு செல்வதற்கு முன்னர் சுகாதார பரிசோதனை களுக்கு ஆளாக்கப்படுகின்ற னர்- ஒரிஸ்ஸா சுகாதாரத் திணைக்களம இதற்கான நட வடிக்கைகளை எடுத்துள்ளது-

இதேசமயம தமது மாநிலத் தில் இரண்டாம கட்டமாக மேலும மூவாயிரத்து 676 இலங் கைத் தமிழ் அகதிகளுக்கு அடைக்கலமளிக்க மாநில முதலமைச்சர் இணக்கம தெரி வித்திருக்கிறார் என்று தெரிய வந்துள்ளது-

இலங்கை அகதிகளை ஏற்றி வரும கப்பல்களுக்கு தமது துறைமுகங்களில் அனுமதி அளிக்க தமிழ்நாடு மற்றும ஆந்திர அரசாங்கங்கள் மறுப் புத் தெரிவித்திருப்பதையடுத்தே இவ் அகதிகளுக்கு புகலிட மளிக்க ஒரிஸ்ஸா முன்வந்திருப் பதாக தெரிவிக்கப்படுகிறது-

[ல—032]

## போதைப்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள் ளது-

உள்நாட்டில் போதைப் பொருள் பாவனையை தடுப்ப தற்கு தேசிய ரீதியில் கொள்கைத் திட்டம ஒன்று வகுக்கப்படும-

டாக்டர்கள், சமூகசேவகர் கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பல்வேறு தரப்பினரையும கொண்ட கமிட்டி ஒன்றும அமைக்கப்பட்டுள்ளது-

பேராசிரியர் நந்தசேன ரத்னபாலா தலைமையிலான இக் கமிட்டியில் பேராசிரியர் நந்தகாச கோத்தாகொட, வண வெல்லங்வில விமலரத்ன தேரர், டாக்டர் ரெலி பெரேரா, முன் னாள் பிரதி பொலீஸ் மா அதி பர் திரு பிராங் டி சில்வா, திரு சற்குணானந்தன், ஆனந்தாக் கல் லூரி அதிபர் திரு எ.பி குண ரத்ன முஸ்லிம மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் ... ஹலீமா இஸ்மாயில் ஆகியோர் இந்தக் கமிட்டியில் இடமபெற் றுள்ளனர்-

(ண-ய)

... பெப்ரவரி மாதம 27ஆம திகதி இடமபெற்ற 12 பேரின் படுகொலை சமபவங்களுக்கு முன்னரும இந்தக் கோஷ்டியி னர் மேலும பல இளைஞர் யுவ திகளை கொந்தராத்து அடிப் படையில் கொலை செய்துள்ள னர் என தகவல்கள் கிடைத் துள்ளன-

மானபங்கம் வாகனக் கடத் தல் தனிப்பட்ட கோபதாபம போன்ற காரணங்களுக்கா க்வே மேற்படி கோஷ்டியினர் இதுவரை நாற்பதுக்கும மேற் பட்டோரை படுகொலை செய்துள்ளனர் என இரகசியப் பொலீஸ் விசாரணைகளின் மூலமும தெரியவந்துள்ளது-

இந்தக் கொலை சமபவங்கள் தொடர்பாக மேலும பல சந்தேகநபர்கள் தலைமறை வாகியுள்ளனர்- எவ்வாறாயி னும சந்தேக நபர்கள் அனைவ ரையும் கைது செய்யுமாறு பொலீஸ் மா அதிபர் திரு ஏர் னஸ்ட் பெரேரா இந்தச் சம பவம தொடர்பாக விசாரணை நடத்தும பொலீஸ் கோஷ்டி யினருக்கு உத்தரவிட்டுள் ளார்-

இச்சமபவம தொடர்பாக ஜமபதுக்கும மேற்பட்ட பொலீஸ் அதிகாரிகள் தீவிர விசாரணைகளை நடத்தி வரு கின்றனர்-

[ல—வ]

பட்டுள்ளன-

தொடர்ந்து மூன்று தினங்களு க்கு இயங்கும இந்த நடமாடும ஜனாதிபதி செயலகத்தில் புத் தளம பகுதி மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தீர்த்து வைக்கப் படும என எதிர்பார்க்கப்படுகி றது-

## இந்திரா...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கி மனிதர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடிச் சென்ற னர் இது விவசாய சேவை நிலை யத்திற்கு சொந்தமானதாகும-

கமபஹாவில் தீவிரவாத சந் தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்- அவர்களிடமி ருந்து 2 வெடி குண்டுகளும கைப் பற்றப்பட்டன-

சேதாலையில் தேடுதல் நடத் திய பொலீஸார் ரிவோல்வர் ஒன்றை கண்டுபிடித்தனர்- இது கே ஏ குலரட்ன என்பவருக்கு சொந்தமானதாகும இவர் சப்ர கமுவ மாகாணத்தில் மாகாண சபை உறுப்பினராவார்-

இந்திய அமைதிகாக்கும படை யைச் சேர்ந்த 475 ஜவான்கள் திருகோணமலையிலிருந்து நேற்று புறப்பட்டுச் சென்றனர்- காங்கே சன்துறையிலிருந்து 115 ஜவான்கள் பயணமானார்கள்-

(ண-கு)

(ண-வ-ய-241)

## சட்ட மா அதிபர்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

வர் நாட்டை விட்டு வெளியேறி விட்டார் பல அமைச்சர்களும அமைச்சு செயலாளர்களும கூட நாட்டில் இல்லை-

அரசமைப்பின் ஆறாவது திருத் தத்திற்கு மாறாக திரு வரதரா ஜப் பெருமாள் தனிநாடு பிரகட னம செய்து விட்டார்-

இப்படியான நிலையில் அரசு மேற்படி மாகாண சபையை கலைத்துவிட நடவடிக்கை எடுக் குமா? இப்படி பத்திரிகையாளர் கள் அமைச்சரிடம கேட்டனர்-

மாகாண சபையை கலைப்பது சட்டச் சிக்கல் நிறைந்த ஒரு பிரச்சினை- இது தொடர்பாக சட்ட மா அதிபரின் ஆலோச னையை அரசாங்கம எதிர்பார்க்கி றது- இது பற்றி ஆளுநர் ஆலோ சனையை நடத்தி வருகிறார்-

கூடிய விரைவில் வடக்கு, கிழ க்கு மாகாண சபை விவகாரம தொடர்பாக முடிவு எடுக்கப்படும என திரு ரஞ்சன் விஜேரத்ன கூறி னார்-

(ண-ய)

... நிலையத்துக்கு வந்து போகிறது-

இந்திய படையினரின் வாக னங்கள் மற்றும உபகரணங்கள் கட்டம கட்டமாக இந்த விமா னம மூலம இந்தியாவுக்கு திருப்பி அனுப்படுகின்றன-

இலங்கையிலுள்ள இந்திய படை யினர் அனைவரும எதிர்வரும 31 ஆம திகதிக்கு முன்னர் இங்கிருந்து முற்றாக வாபஸ் பெறப்படுவார் என்றும அந்த அதிகாரி தெரி வித்தார்-

(ண-வ)

## வரதராஜ...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளேன் எனக் குறிப்பிட்ட அமைச்சர் விஜேரத்ன -

தமிழ்த் தீவிரவாதிகளுக்கு இந்தியா தஞ்சம அளிப்பதை நிறுத்திக் கொண்டால் இலங்கை யில் தமிழர்களை தமிழர்களே கொலை செய்யும் முறை ஒழிந்துபோகும என்றும சொன் னார்-

(ண-ய)

## இன விகிதாசார..

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

விகிதாசாரம கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும. நியமனங்களும பதவி உயர்வு களும தகுதியுடையவர்களுக்கு இன விகிதாசார அடிப்படையி லேயே வழங்கப்பட வேண்டும. அரசியல் தலையீடுகள் இருக் கக் கூடாது.

அரசாங்கத்தின் இந்தக் கொள்கையை எவரும மீறக் கூடாது. ஆனால் மீறப்படுவதா கத் தகவல்கள் கிடைத்துள்ளன

எல்லா இனத்தவர்களும ஒரே மாதிரி நடத்தப்பட வேண்டும. பாரபட்சம காட்டுவதை அனு மதிக்க முடியாது. ஜனாதிபதி இதில் மிகவும கண்டிப்பாக இருக்கிறார்.

நியமனங்கள் வழங்கப்படு வதைக் கண்காணிப்பதற்கு பொது நிர்வாக அமைச்சில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்

(உ-ய)

# ஜனநாயக பண்புகளை...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

இதனால் அவருக்கும அவரது அரசாங்கத்துக்கும ஆதரவு வழங்க இவர வேண்டும-

இலங்கையில் இருந்தோ அல் லது வெளியில் இருந்தோ எழக் கூடிய ஜனநாயக மற்றும சமா தான விரோத சக்திகளுக்கு எதி ராக ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க வேண்டும-

பொதுநல அமைப்பு நாடுகள் சபை பிரிட்டிஷ் சக்கராதிபத்தியத் தில் இருந்து தோன்றிய தொன்றா கும- உலகில் தோன்றிய சக்கராதி பத்தியங்களிலேயே மிகவும பலம பொருந்தியதாக விலங்கியது பிரிட்டிஷ் சக்கராதிபத்தியமே-

இப்போது ரஷ்ய சக்கராதிபத் தியமும எமது கண்முன்பாக சரி ந்து வருகிறது- கி மு நாலாயிரம ஆண்டின் போது உலகில் தோன் றிய சுமேரியர் சக்கராதிபத்தியத் தின் பின்னர் இப்போது கடைசி யாக உலகில் நிலைத்து நிற்கும ரஷ்ய சக்கராதிபத்தியமும நலி வுற்று வருவதை நாம பார்க்கக் கூடியதாக இருக்கிறது-

எமது முன்னாள் பிரதமர் டி எஸ் சேனநாயக்கா 1950 ஆம ஆண்டு ஜூலை 7 ஆம திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை இங்கு குறிப்பிடத்தக்கது-

உலகைத் தமக்குக் கீழ் கொண்டுவருவதே ரஷ்யர்களின் நோக்கமாக உள்ளது என்றே நாம கருதுகிறோம- ஆனால் உலகம சுதந்திரம கொண்டதாக இரு க்க வேண்டும என்பதே எமது அபிப்பிராயம என்று அவர் தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்-

இப்படி திரு ஜே ஆர் ஜெய வர்த்தனா கூறினார்-

# ஆப்கன் சதிப்புரட்சி: பாகிஸ்தான் மறுப்பு

## பத்திரிகையாளர் மாநாட்டில் பிரதமர் பெனாஸிர் பூட்டோ

இஸ்லாமாபாத், மார்ச் 15

**ஆப்கானிஸ்தானில் கடந்த வாரம் இடம்பெற்ற சதிப் புரட்சிக்கு பாகிஸ்தான் இராணுவ உளவுப் பிரிவு தான் காரணம் என்ற குற்றச்சாட்டை பிரதமர் பெனாஸிர் பூட்டோ மறுத்திருக்கிறார்.**

ஆப்கன் சதிப் புரட்சிக்கு பாக் இராணுவ உளவுப் பிரிவு காரணம் என காபூல் குற்றம் சாட்டியிருந்தது- இந்தக் குற்றச் சாட்டையே பெனாஸிர் மறுத்திருக்கிறார்-

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் உரையாற்றினார்- அங்கு தொடர்ந்து பேசிய பெனாஸிர் கூறியதாவது-

ஆப்கன் சதிப்புரட்சி எதிர்பாராத ஒன்று- அது திடீரென இடம்பெற்றிருக்கிறது- இந்தப் புரட்சி எல்லோரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியது- இவ்வாறான சதிப்புரட்சி ஒன்று ஆப்கனில் இடம்பெறப் போகிறது என்று எமது பாதுகாப்புப் படையினரோ அல்லது வேறு பாதுகாப்புப் படையினரோ முன்கூட்டியே தெரிந்து வைத்திருக்கவில்லை-

கடும் போக்குக் கொண்ட ஆப்கன் பாதுகாப்பு அமைச்சர் ஷாநவாஸ் டனாய் கடந்த 6 ஆம் திகதி புரட்சியை வழிநடத்தினார்-

பாகிஸ்தான் ஏஜன்சிகளுக்கோ இல்லாது போனால் பாகிஸ்தானில் இருக்கும் ஆப்கன் கெரில்லாக் குழுக்களுக்கோ இந்தப் புரட்சியில் சம்பந்தமில்லை என்பது எமது கருத்தாகும்-

நஜிபுல்லாவுக்கு ஆப்கன் மக்களின் ஆதரவு கிடையாது அவரது முன்னாள் சகாக்கள் அவருக்கெதிராகக் கிளம்பியிருக்கின்றனர் இவ்வாறு அவர் கூறினார்-

(ந)

## லிபிய ஆயுத தொழிற்சாலை, தீ விபத்து

வாஷிங்டன் மார்ச் 15

திரிபொலியின் தெற்கில் 60 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள ராப்டா இரசாயன ஆயுதத் தொழிற்சாலையில் தீப்பிடித்துக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது-

வெள்ளை மாளிகை இது பற்றி அறிவித்தது-

அமெரிக்கா இவ்விடயத்தில் தனக்கொரு பங்களிப்பும் இல்லை எனக் கூறுகிறது-

மேற்கு ஜெர்மனியின் மேற்குலகக் கம்பனிகளின் உதவிகளுடன் லிபியாவில் உருவாக்கப்பட்ட ராப்டா இரசாயனத் தொழிற்சாலையில் 150 ஏவுகணைகளைத் தயாரிக்க கூடிய நச்சுவாயு இருக்கிறது

இது பற்றி வெள்ளை மாளிகை அறிவித்தது-

(எ-ரி)

## மங்கோலிய கம்யூ. கட்சியிலிருந்து பிரிய தொ. சங்கங்கள் முடிவு

யுவான்பேட்டர் மார்ச் 15

மங்கோலிய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து விடப் போவதாக மங்கோலியாவின் அதிசக்தி வாய்ந்த தொழிற் சங்கங்கள் புதன்கிழமை அச்சுறுத்தல் விடுத்தன-

கிழக்கு ஐரோப்பாவில் அரசியல் மாற்றங்கள் இடம்பெற்று வருவது தெரிந்ததே- மங்கோலியாவிலும் இப்போது புதிதாக எதிர்க்கட்சிகள் பல தோன்றியிருக்கின்றன-

இப்புதிய கட்சிகளின் நிர்ப்பந்தம் மங்கோலிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு பலத்த சவாலாக அமைந்திருக்கிறது-

ஐக்கியம் சுதந்திரம் என்பவற்றுடன் கூடிய ஒரு அரசாங்கம் தேவையென தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியிருக்கின்றன-

(எ)

## உலகச் செய்திகள்

## சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜியாங் வடகொரியா விஜயம்

பீக்கிங் மார்ச் 15

சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜியாங் செமின் வடகொரியத் தலைவர் கிம் இல் சுங்கை புதனன்று சந்தித்தார்-

கடும் போக்குக் கொண்ட கம்யூனிஸ்ட் நாடுகள் இரண்டும் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தை முன்வைத்தே இச் சந்திப்பு இடம்பெற்றது-

கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஜியாங் பதவியேற்றபின் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுச் சுற்றுலா இதுவாகும்-

அவருக்கு 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்த்து வரவேற்பு அளிக்கப்பட்டது-

ஆயிரக்கணக்கானோர் வீதிகளில் கூடி நின்று அவரை வரவேற்றனர்-

வடகொரிய தலைவர் கிம் இல் சுங் எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதி பதவி விலகுவார் என எதிர்பார்க்கப்படுகிறது-

அன்றைய தினம் தமது 78 ஆவது வயதை இவர் கொண்டாடுகிறார்-

(எ)

## சிங்கப்பூரில் புதிய கடற்படை முகாம்

சிங்கப்பூர் மார்ச் 15

சிங்கப்பூரின் மேற்குப் பகுதியில் புதிய கடற்படை முகாம் ஒன்று அமைக்கப்படும்-

பாதுகாப்பு பிரதி அமைச்சரான லீ சியென் லூங் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் இதனை தெரிவித்தார்-

புதிய கடற்படை முகாம் 1993 ஆம் ஆண்டளவில் முற்றுப் பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்-

சிங்கப்பூரின் தென்பகுதியில் பிரானி தீவில் ஏற்கனவே கடற்படை முகாம் ஒன்று அமைந்துள்ளது-

(ந)...

# பிக்குவைத் தாக்க வேண்டாம் என எனது அன்னையார் இறைஞ்சினார்

## மனுதாரர் தரப்பில் சாட்சியம்

கொழும்பு, மார்ச் 15

ஆயுததாரிகள் குழுவினர் பௌத்த பிக்குவைத் தாக்கிய போது எனது அன்னையார் குறுக்கிட்டார்- வடிகமங்காவ கிராம பௌத்த விகாரையைச் சேர்ந்த இந்த பௌத்த பிக்குவைத் தாக்க வேண்டாம் என அவர் அவர்களிடம் இறைஞ்சினார்-

ஆனால் அந்த பௌத்த பிக்குவைத் தாக்கிய 15 பேர் கொண்ட அக் குழுவினர் அவரையும் வேறு ...

சென்று மறைந்ததும் நீர் எங்கே சென்றீர்?

சாட்சி- நான் விகாரைக்குச் சென்று பௌத்த பிக்குவை வெளியே வருமாறு அழைத்தேன்-

சட்டத்தரணி- நீர் ஏன் அவரை வெளியே வரும்படி அழைத்தீர்

சாட்சி- என்ன நடந்தது என்பதைக் கேட்பதற்காக அவரை வெளியே அழைத்தேன்-

சட்டத்தரணி- அக் கோஷ்டியினர் பிக்குவை வெளியே வரும ...

நீர் திருமணமானவரா?

சாட்சி- ஆம்-

சட்டத்தரணி- உமது மனைவியும் தூங்காமல் விழித்திருப்பாரா?

சாட்சி- அப்போது நாங்கள் ஒன்றாக இருக்கவில்லை- இப்போது ஒன்றாகவே வாழ்ந்து வருகிறோம்-

பிரதம நீதியரசர்- நீர் திருமணத்தைப் பதிவு செய்திருந்தாலும் அதைக் கொண்டாடவில்லை?

சாட்சி- ஆம்-

சட்டத்தரணி- அக் கோஷ்டி இரண்டாவது தடவையாக உமது ...

வதை கண்டீர்?

சாட்சி- நான் விகாரையின் கேட் வரை சென்றேன்- அக் கோஷ்டியினர் பிக்குவைத் தாக்கியபடியே கேட்டை நோக்கி இழுத்து வருவதைக் கண்ட நான் கடைக்குத் திரும்பிச் சென்றேன்

சட்டத்தரணி- பிரதான பாதை வழியாக திரும்பிச் சென்றீர்?

சாட்சி- ஆம்-

சட்டத்தரணி- அக் கோஷ்டி உம்மைக் கண்டிருக்கக் கூடுமா?

சாட்சி- அப்போது என் அன்னை கடைக்கு வந்தார்- பின்னர் அக் கோஷ்டியினர் ...

இந்திய உபகண்டத்திலிருந்து

# இத்தாலி வந்த 17 பேர் கிரேக்கத்துக்கு அனுப்பப்பட்டனர்

இத்தாலி மார்ச், 15

இந்திய உபகண்டத்திலிருந்து இத்தாலி வந்த 17 சட்டவிரோத குடியேற்றவாசிகள் புதனன்று கிரேக்கத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்-

இத்தாலிய அதிகாரிகள் அவர்களுக்கு அரசியல் புகலிடம் தர மறுத்தனர்- இதனாலேயே இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி 54 பேர் கொண்ட குழுவொன்று இத்தாலியிலுள்ள பாரி வந்து சேர்ந்தது- இந்தக் குழுவைச் சேர்ந்த 17 பேரே ...

இலங்கையைச் சேர்ந்த இந்த 54 பேரில் 48 பேர் ஆண்களாவர் இவர்கள் இத்தாலி அரசாங்கத்திடம் புகலிடம் கோரி விண்ணப்பித்திருந்தனர்-

கிரேக்கத்திலிருந்து இத்தாலி வருவதற்கு ஒவ்வொருவரும் 2.000 டாலர்கள் வீதம் செலுத்தியதாகவும் அறிவிக்கப்படுகிறது-

கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி இவர்கள் கிரேக்கத்துக்கு ...

## வங். தேர்தல் வன்முறையில் இருவர் பலி

டாக்கா, மார்ச்- 15

வங்காளதேச உள்ளூராட்சித் தேர்தல்களின் முதல் தின ...

டாற என அவர் அவர்களி
களிடம் இறைஞ்சினார்—

ஆனால் அந்த பௌத்த பிக்குவைத் தாக்கிய 15 பேர் கொண்ட அக் குழுவினர் அவரையும் வேறு ஒரு சுதந்திரக் கட்சி ஆதரவாளரையும் ஒரு வழியாக அழைத்துச் சென்றனர்— எனது கடையையும் அவர்கள் தாண்டிச் சென்றனர்— மற்ற கட்சி ஆதரவாளர் அக் குழுவினரிடம் சிறைப்பட்டிருந்தார்— இச் சம்பவம் ஜனாதிபதி தேர்தல் தினமான டிசம்பர் 19 ஆம் திகதி காலையில் நடைபெற்றது—

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மீதான விசாரணைகளின் போது முறைகாரர் தரப்பில் தோன்றி சாட்சியளித்த ஏ எச் எம் எ சாமரரத்ன இவ்வாறு தெரிவித்தார்—

திரு பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியது செல்லுபடியாகாது என்று தெரிவிக்க சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் மனு பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க, நீதியரசர்கள் எச் டி தம்பையா, ஜி பி எஸ் டி சில்வா, எம் ஜமீல், பி ராமநாதன் அடங்கிய மன்றினையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது—

அப்போது சாட்சியை பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி கே என் சொக்ஸி குறுக்கு விசாரணை செய்தார்—

சட்டத்தரணி— இவ்வு சாட்சிக் கொண்டவர்கள் பௌத்த பிக்குவைத் தாக்கிச் சென்ற கூட்டத்தினரை நீர் அடையாளம் கண்டு கொள்ள முடிந்ததா?

சாட்சி— அவர்களைக் காலைக் கொண்டு நான் அவர்களை அடையாளம் கண்டு கொண்டேன்—

சட்டத்தரணி— உமக்கு ஒரு தூரமையில் அவர்கள் சென்றதால் அவர்களை உம்மால் அடையாளம் காண முடிந்தது?

சாட்சி— நான் புகைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டேன்—

சட்டத்தரணி— பதினைந்து பேர் கொண்ட கோஷ்டியும் ஒரு வரும் உம்மைக் காணவில்லையா?

சாட்சி— ... டித்தான்—

சட்டத்தரணி— அவர்கள் ... அவர்களை வெளியே வருமபடி அழைத்தார்?

சாட்சி— என்ன நடந்தது என்பதைக் கேட்பதற்காக அவரை வெளியே அழைத்தேன்—

சட்டத்தரணி— அக் கோஷ்டியினர் பிக்குவை வெளியே வருமபடி அழைந்ததாகவும் ஆனால் அவர் கதவைத் திறக்கவில்லை என்றும் நீர் சொன்னீர் அல்லவா? நீர் எந்தச் சம்பவத்தைப் பற்றி சொல்கிறீர்?

சாட்சி— இக் கோஷ்டி விகாரைக்கு காலை ஆறரை மணியளவில் மீண்டும் திரும்பி வந்தது—

சட்டத்தரணி— நான் அதிகாலை மூன்றரை மணி பற்றி கேட்கிறேன்— நீர் ஏன் பிக்குவை வெளியே வருமபடி அழைத்தீர்?

# ஜனாதிபதி தேர்தல் வழக்கு

சாட்சி— சம்பவத்தை அவரிடம் கூறுவதற்காக—

சட்டத்தரணி— அதன் பின்னர் நீர் வீடு திரும்பினீர்—

சாட்சி— ஆம—

சட்டத்தரணி— உமது கூற்றின் பிரகாரம் இதே கோஷ்டி ஐந்தரைக்கும் ஆறரைக்கும் இடையே மீண்டும் திரும்பி வந்தது— அச் சமயம் உமது கடையைத் தாண்டி அக் கோஷ்டி பௌத்த விகாரையை நோக்கிச் சென்றது— அப்படியா?

சாட்சி— ஆம—

சட்டத்தரணி— அவர்கள் சென்றதும் எவ்வளவு நேரத்தின் பின்னர் நீர் அவர்களைப் பின் தொடர ஆரம்பித்தீர்?

சாட்சி— சுமார் ஐந்து நிமிடங்கள் கழித்த பின்னர்—

சட்டத்தரணி— டிசம்பர் 18 ஆம திகதி இரவு நீர் விழித்திருந்ததாக கூறினீர் அல்லவா?

சாட்சி— ஆம— என் கடையைப் பாதுகாக்க வேண்டியிருந்தது—

சட்டத்தரணி— கடையைப் பாதுகாக்கும் பொருட்டு நீர் தினமும் இரவில் விழித்திருப்பது வழக்கமா?

சாட்சி— தேர்தல் காலத்தில் பிரச்சினைகள் தோன்றியிருந்தன— நான் இரவு ஒன்பது மணியில் இருந்து ... மணி வரை தூங்கியெழுவது வழக்கம—

நீதியரசர்— எச் டி தம்பையா— ஆம அதைக் கொண்டாடவில்லை?

சாட்சி— ஆம—

சட்டத்தரணி— அக் கோஷ்டி இரண்டாவது தடவையாக உமது கடையைத் தாண்டிச் சென்ற போது அவர்களுடன் அந்த சுதந்திரக்கட்சி ஆதரவாளரும காணப்பட்டாரா?

சாட்சி— ஆம— எனக்குக் குரல்கள் கேட்டன— ஏனெனில் அவர்கள் எமது கிராமத்தைச் சேர்ந்தவர்கள்— மேலும எனது உறவினர்களும கூட—

சட்டத்தரணி— அக் கோஷ்டியினர் பலாத்காரமாக தம்முடன் அழைந்துச் சென்ற சுதந்திரக் கட்சி ஆதரவாளரும உமது உறவினரா?

சாட்சி— ஆம— அவர் எனது ஒன்றுவிட்ட சகோதரர்—

சட்டத்தரணி— உமது ஒன்றுவிட்ட சகோதரரை அவர்கள் என்ன செய்தனர்?

சாட்சி— அவரை விட்டே பௌத்த பிக்குவை வெளியே வருமபடி அழைக்கச் செய்தனர்—

சட்டத்தரணி— நீர் பௌத்த விகாரைக்குச் சென்ற போது அக் கோஷ்டியினர் பிக்குவைத் தாக்கு

சட்டத்தரணி— அக் கோஷ்டி உம்மைக் கண்டிருக்கக் கூடும?

சாட்சி— அப்போது என் அன்னை கடைக்கு வந்தார்— பின்னர் அக் கோஷ்டியினர் வந்து கொண்டிருக்கும பக்கமாகச் சென்று அவரைத் தாக்க வேண்டாம என கேட்டுக் கொண்டார்—

சட்டத்தரணி— அக்கோஷ்டியினரை உமது தாயாரும அறிவார்?

சாட்சி— ஆம—

சட்டத்தரணி— விகாரைக்கு அக் கோஷ்டியினர் இரண்டாம தடவையாகச் சென்ற போது பிக்கு கதவைத் திறந்தாரா?

சாட்சி— எமது கட்சி ஆதரவாளர் கூப்பிட்டதைத் தொடர்ந்தே பிக்கு கதவைத் திறந்தார்—

சட்டத்தரணி— அதிகாலை மூன்றரை மணிக்கு அக் கோஷ்டியினர் கதவை உடைத்துத் திறந்திருக்க முடியும?

சாட்சி— ஆம—

நீதியரசர் தம்பையா— விகாரையின் மீது அக் கோஷ்டியினருக்கு இருந்த கௌரவமா இதற்குக் காரணம—

சாட்சி— விகாரைக்கு கௌரவம வழங்குவது இயற்கை தானே!

(விசாரணை தொடரும)

(ல—032)

# காளான் உற்பத்தி

வாரியபொல மார்ச் 14

சுயதொழில் வாய்ப்புத் திட்டத்தின் கீழ் காளான் உற்பத்தித் திட்டம சிறந்த வருமானம் உள்ள ஒரு தொழில் முயற்சியாகும,

இவ்வாறு வடமேல் மாகாண சபை விவசாய உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு ஆர் எம ஆர் நிமல்பண்டார கூறினார்.

வாரியப்பொல விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் காளான் உற்பத்தியாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது,

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது—

இரசாயன முறையில் உற்பத்தி செய்யப்படும காளான்களுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருந்து வருகின்றது.

காளான்களை கெடாமல் உலர்த்தி தகரங்கள், பக்கெட்டுக்களில் அடைத்து வைக்க முடியும,

இது குறுகிய கால உற்பத்திப் பயிராகும, காளான் உற்பத்தியாளர்களுக்கு வங்கிக் கடன் வசதிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஜ—138)

டாக்கா, மார்ச்— 15

வங்காளதேச உள்ளூராட்சித் தேர்தல்களின் முதல் தினமான புதன்கிழமை நடந்த தேர்தல் வன்முறைகளில் இருவர் உயிரிழந்தனர்—

சுமார் 200 பேர் காயமடைந்தனர்— வாக்குச் சாவடிகள் பல முற்றுகையிடப்பட்டு வாக்குப் பெட்டிகள் பறிக்கப்பட்டன— துப் ... ர்களும் இடம பெ...

(எ)

திகதி 54 பேர் கொண்ட குழுவொன்று இத்தாலியிலுள்ள பாரி வந்து சேர்ந்தது— இந்தக் குழுவைச் சேர்ந்த 17 பேரே கிரேக்கத்துக்கு இராணுவ விமானம் மூலம திருப்பி அனுப்பப்பட்டனர்—

விசாரணையின் பின் ஏனையோர் அனுப்பி வைக்கப்படுவார்கள் என பொலீஸார் தெரிவித்தனர்—

இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம உட்பட

றது—

கடந்த பெப்ரவரி 24ஆம திகதி இவர்கள் கிரேக்கத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்— பட்ராஸ் துறையில் அவர்களை இறக்குவதற்கு அதிகாரிகள் இடமளிக்கவில்லை—

பாரியில் இவர்கள் மார்ச் 1 ஆம் திகதி வரை உண்ணா விரதப் போராட்டமொன்றை ஆரமபித்தனர்— இதனையடுத்தே இவர்கள் விடயத்தில் அதிகாரிகள் கவனம எடுத்திருக்கின்றனர்

(எ)


இப்பொழுது பெறலாம்!

குணசேன

ஆங்கில—தமிழ்

சுருக்க அகராதி

ஆக்கியோன் - எஸ் நடராசா

விலை ரூ. 190.00

பாடசாலை மாணவர்களுக்கும் காரியாலயப் பயன்பாட்டுக்கும் மிகச் சிறந்த அகராதி

உங்கள் தேவைக்கு உடனே

எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள்




எம். டி. குணசேன

அன்ட் கம். லிமிட்.

217- ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

கிளைகள்— கொள்ளுப்பிட்டிய- களுத்துறை- காலி- மாத்தறை- கண்டி- குருநாகல்- நீர்கொழும்பு

புகையிரத புத்தகசாலை— மருதானை- பொல்காவலை- கண்டி- காலி- மாத்தறை- அனுராதபுரம்

# மத்ரஸாவில் கல்வி ஊட்டும் முறை சிறப்பானதாக அமைதல் வேண்டும்

— எம். ஆர். எம். மஹ்ரூப் —

"உங்களில் முதியவர்களுக்கு மரியாதை செய்யாதவனும சிறுவர்களுக்கு இரக்கம காட்டாதவனும என்னைச் சேர்ந்தவனல்ல"

இது பெருமானார் (ஸல்) அவர்களின் ஹதீஸாகும.

இன்று பல மத்ரஸாக்களில் கல்வி போதிக்கப்படும முறை சிறுவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய முறையில் உள்ளதா? என்று சிந்திக்க வேண்டி இருக்கிறது.

ஓதிக் கொடுக்கும "ஹஸரத்" என்று, அழைக்கப்படும லெவ்வை கையிலே தடியுடன் நின்று கொண்டு மந்தை மேய்ப்பது போல எந்தவித தயவு தாட்சன்யமுமின்றி குழந்தைகளை அடிப்பது தவறாகும.

"ஹஸரத்" மேல் உள்ள பயத்தினால் குழந்தைகள் எப்படியாவது தமக்குரிய பாடத்தை மனனம செய்து கொண்டு வந்து அப்படியே ஒப்புவிக்கிறார்கள்.

வரிசையாக அன்றி இடையிலே இருந்து பாடத்தை குறுக்கு நெடுக்காக நாம கேட்டால் திருதிருவென்று அவர்கள் விழிக்கிறார்கள்.

தஃலீமுல் குர்ஆனில் இருந்து தான் சிறார்களுக்கு மார்க்கக் கல்வி ஆரமபம ஆகிறது,

அதில் உள்ள எழுத்துக்களைச் சேர்க்கும போது வசனங்கள் உண்டாகும விதத்தைக் கற்பிக்க "ஹஸரத்"மாருக்குச் சந்தர்ப்பம கிடைப்பதில்லை

காரணம மிதமிஞ்சிய சிறுவர்களை தனி ஒரு "ஹஸரத்" நின்று சமாளிக்க வேண்டிய கட்டாய நிலை.

கலிமா, ஈமான் இஸ்லாம என்ற தலைப்பிலும தொழுகை, நோன்பு உட்பட இஸ்லாத்தின் மூலதாரங்கள் என்ற தலைப்பிலும வுழு, தயமமும, ஒழுக்கு போன்ற பாட போதனைகளும மத்ரஸாக்களிலே வாய்ப் பாடமாகச் சொல்லிக் கொடுக்கப் படுகின்றன.

ஆரமபத்தில் ஹஸரத் சொல்லிக் கொடுக்க தொடர்ந்து ஒவ்வொரு சிறுவராக எழுந்து ஒவ்வொரு நாள் சொல்லிக் கொடுக்க வேண்டும,

இதுதான் வழமை.

ஆனால் இதன் பொருள், விளக்கங்கள், கருத்துக்கள் ஹஸரத்களால் என்ன ஏது என்று சொல்லிக் கொடுக்கப் படுவதில்லை.

இப்படிப்பட்ட மத்ரஸா சூழ்நிலையில் படிக்காத அந்தச் சிறார்களுக்கு இவைகளைப் படிக்க வேறு சந்தர்ப்பங்கள் அமைவதில்லை.

சிறுவர்களை உற்சாகப் படுத்தும நோக்கில் புதிதாக ஒரு "ஜுஸ்உ" முடிந்து அடுத்தது ஆரமபமாகும் நாளிலே முன்னர் சிறார்கள் வீட்டிலே இருந்து ஏதாவது சிற்றுண்டிகளைக் கொண்டு வந்து ஏனைய சிறார்களுக்கும கொடுத்த மகிழ்ச்சியை வெளிப் படுத்துவார்கள்.

ஆனால் இப்போதுள்ள "ஹஸரத்"கள் அதனையும தவிர்த்து கொள்ளுமாறு சிறுவர்களுக்குக் கூறுகிறார்களே ஏன்?

அநேகமான நகர்புறங்களில் பள்ளிவாசலின் ஒரு பகுதியில் தான் மத்ரஸாக நடத்தப்படுகிறது.

தொழுகை ஒரு புறம நடை பெற்றுக் கொண்டிருக்க ஹஸரத் அடித்ததாக சிறுவர்கள் ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருப்பர்.

சமபந்தப்பட்ட பெற்றோர் உடன் வந்து குழந்தையை வீட்டுக்கு அழைத்துச் செல்ல, ஒரு ரகளையே அங்கு நடக்கின்றது

சிறுவர்களின் கூச்சலும சத்தமும தொழுபவர்களை வெகுவாகப் பாதிக்கிறது.

ஓர் அமைதியான சூழலை உண்டாக்க "ஹஸரத்"கள் சிறுவர்கள் மீது அன்பையும, இரக்கத்தையும சொரிய வேண்டும.

அன்பால் இயலாதது எதுவுமே இல்லை.

அதனை விட்டு விட்டு சிறுவர்கள் மேல் சீறிப் பாயவும, அவர்களை ஏய்க்கவும துணியும போது அங்கே வீண் பிரச்சினைகளே சமபவிக்கின்றன.

இன்று அநேகமான பெற்றோர் தம சிறார்களைப் பின்னேர வகுப்புகளுக்கு, அல்லது விளையாட என்று அனுப்பி வைப்பது ஒரு பாஷனாகி விட்டது.

இவர்களின் கவனத்தை மத்ரஸா பக்கம திருப்ப வேண்டும.

மார்க்கக் கல்வியின் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்த வேண்டும.

அந்நிய மதத்தவர்கள் வாழும சூழலிலே சில இடங்களில் மத்ரஸாக்கள் அமைவதும உண்டு.

அங்கே அழு குரலும, இரைச்சலும ஓயாத கேட்டபடி இருந்தால் எமது கலாசாரத்திற்கு அது அழகாக இருக்காது, அவர்கள் எம மீது நமபிக்கையும பற்றும வைக்குமபடி செய்வது நம் கடமையாகும.

எனவே, மத்ரஸாக்களிலே காணப்படும குறைகளை நிவர்த்தி செய்து சிறுவர்களை அன்பாக நடத்தி நாட்டுக்கு நல்ல பிரஜைகளை உருவாக்க முயிற்சிப்போமாக!

ஆமீன்!

வஸ்ஸலாம.

## ரஹ்மத்தின் நிழலில் 7 பேருக்கு இடம்

நபி (ஸல்) அவர்கள் கூறியதைச் செவியுற்றதாக ஹஸரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கிறார்கள்—

"எந்த வித நிழலும இல்லாத கியாமத்து நாளில் அல்லாஹுத்தஆலா தன்னுடைய ரஹ்மத் என்ற நிழலில் ஏழு நபர்களுக்கு இடமளிக்கிறான்—

நீதி வழுவா மன்னன்—

அல்லாஹ்வின் வணக்க வழிபாடுகளில் தன் வாலிபத்தைக் கழித்த வாலிபன்—

மஸ்ஜிக்களில மனம தொடர்புள்ள மனிதன்—

அல்லாஹ்வுக்காகவே நட்பு கொண்ட இரு மனிதர்கள்—

அவர்கள் கூடுவதும பிரிவதும அல்லாஹ்வுக்காவே இருக்கும—


அழகும அந்தஸ்தும உள்ள ஒரு பெண் தவறான செயலுக்கு அழைத்தும் "நான் அல்லாஹ்வைப் பயப்படுகிறேன்" என்று கூறி விலகிக் கொண்ட மனிதன்—

வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாத மறையில் மறைத்து தர்மம் செய்யும் மனிதன்—

தனித்திருந்து அல்லாஹ்வை நினைவு செய்து கண்ணீர் வடிக்கும மனிதன்—

(ஆதாரம்— புகாரி முஸ்லிம்)

நப்ஹாம ஏ வஹாப்



கொழும்பு மாளிகாவத்தை லேனில் அமைந்துள்ள மஸ்ஜிதுஸ் ஸலாம பள்ளிவாசலில் இன்று 16ஆம திகதி முதல் குத்பாப் பிரசங்கம நடத்தப்படும—

ஜுமஆப் பள்ளிவாசலாக வக்பு சபை இப்பள்ளிவாசலுக்கு அங்கீகாரம அளித்திருக்கிறது—

இப் பள்ளிவாசலின் புதிதாக நிர்மாணம செய்யப்பட்ட கட்டிடத்தையே படத்தில் காண்கிறீர்கள்—

[—007]...

தினபதி இஸ்லாமிய பூங்கா

தயாரிப்பு: எப். எம். பைரூஸ்

## தாயாருக்குப் பணிவிடை

என் தாயாருக்குத் தள்ளாத முதுமை வந்த உடன் நான் அவர்களை விட்டுப் பிரியாமல் வேண்டிய பணிவிடைகளைச் செய்து வந்தேன்—

இதனால் என் உயர்வு என் தாயாரின் பாதத்திலிருந்து கிடைத்தது—

ஒருநாள் நாட்டின் காவலரான சுலைமான் இப்னு அலி என்னை அழைத்து "உமது ...

விடை செய்வதை நான் விருமபவில்லை— என்று பதிலளித்து விட்டேன்—

கஹ்மஷ் இப்னுல் ஹஸன் என்ற பெரியார் இவ்வாறு கூறினார்கள்—

ஏ முக்மமது ஜலீல்

## இஸ்லாம் விரும்பும் இலட்சிய மனைவியின் அணிகலன்கள்

பெண்கள் உலகத்தின் கண்கள், அவர்கள் தான் மனித சமுதாயத்தின் பாதுகாவலர்கள்— மனித வர்க்கத்தின் உயர்வு தாழ்வு யாவும மாதர்களிடம"

இதில் எவ்வளவு எழில் மிகுந்த இலக்கியச் சுவை இருப்பதை நாம ஒருவாறு அறிய முடிகிறது—

இறை நேசர் அவர்கள் இலட்சிய மனைவியின் இலக்கணத்தை நம தாய்க்குலம சீர்தூக்கிப் பார்க்க வேண்டும—

ஹஸரத் இப்றாஹீம (அலை) அவர்கள் ஹாஜராவையும, இஸ்மாயில் (அலை), அவர்களை ...

வடிவமுள்ள ஒரு கிழவர் வந்தார் என்று சொன்னார் பிறகு அவர் என்ன கூறினார்?" என்று கேட்டதற்கு அவள் "உமக்கு ஸலாம சொல்லி வாசற்படியைப் புரட்டிப் ...

அதன் பின்னர் அப்பெரியவரைப் பார்த்து "உங்களுக்கு ஸ்நானம செய்விக்கிறேன்— இறங்குங்கள்" என்று கேட்டுக் கொண்டார்கள்— ஆனால் இறை நேசர் இறங்கவில்லையாதலால் ஒரு கல் கொண்டு வந்து போட்டார்கள்—

இறை நேசர் அவர்கள் குதிரையில் இருந்து கொண்டே அக் கல்லில் காலை வைத்தார்கள் மருமகள் மாமனாரின் வலது புறத்தைக் கழுவினார்— பிறகு அந்தக் கல்லை இடதுபுறம திருப்பிப் போட்டு இடதுபுறத்தையும கழுவினார்கள்—

## அஸ்ஹாபுல் கஹ்பின்

என்னை அழைத்து "உமது தாயாருக்கு பணிவிடை செய்வதற்காக ஓர் அடிமையை விலைக்கு வாங்கிக் கொள்ளும்" என்று ஆலோசனை கூறினார்-

"நான் சிறு குழந்தையாக இருக்கும் போது என்னைப் பார்த்துக் கொள்ள ஓர் அடிமையை ஏற்படுத்துவதற்கு எனது தாயார் விரும்பவில்லை-

தாமே என்னைக் கவனித்து வந்தார்கள்-

அது போல இப்பொழுது நான் பெரியவராகி விட்ட நிலையில் என்னைத் தவிர வேறு யாரும் அன்னாருக்கும் பணி

## பத்ரிய்யீன்

புனித ரமழான் நோன்பு மாதத்தின் பதினேழாம நாளில் இஸ்லாத்திற்காக இன்னுயிர் ஈந்த பத்ரு ஸஹாபாக்களின் நினைவாக "அஸ்ஹாபுல் பத்ரிய்யீன்" எனும் ஒலிப்பதிவு நாடா மார்ச் 23ஆம திகதி யன்று வெளியிடப்படும்-

மௌலவிகள் ஏ அப்துர் ரஹ்மான் (புஹ்ஜி) ஆர் என் ஸைபுதீன் ஸாஹிப் தலைமையில் பல உலமாக்கள் ஆலிமகள் இந்த ஒலிப்பதிவு நாடாவில் குரல் கொடுத்து சிறப்பித்துள்ளனர்-

[—007]

# மஜ்லிஸ்

ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 18

## வை. எம். எம். ஏ. பேரவை மாநாடு

இளைஞர் பிரச்சினைகளுக்குத் துரிதமாகத் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் வெகுவாக உணரப்பட்டுள்ள இன்றைய காலகட்டத்தில் முஸ்லிம் வாலிபர்களின் கூட்டு இயக்கமான அகில இலங்கை வை எம் எம ஏ பேரவை அதன் நாற்பதாவது வருடாந்த மாநாட்டை எதிர்வரும ஞாயிறன்று நடத்த இருப்பது பொருத்தமான ஒரு விடயமே!

முஸ்லிம் சமுதாயத்தின் பல்துறை வளர்ச்சியையும கருத்திற் கொண்டு அறிஞர் மர்ஹூம அல்ஹாஜ் ஏ எம ஏ அஸீஸ் இந்த வை எம எம ஏ பேரவையை ஸ்தாபித்தார்-

சமுதாயத்தின் ஜீவநாடி இளைஞர்களே- நாளைய தலைவர்களும் அவர்களே-

முஸ்லிம வாலிபர்களைப் பொறுத்தவரை அவர்கள் செய்ய வேண்டிய பணிகளோ அநேகம!

வை எம் எம ஏ பேரவை மாநாட்டில் முஸ்லிம வாலிபர்களின் மேம்பாட்டுக்கும் சமுதாய வளர்ச்சிக்குமான கருத்துப் பரிமாறல்களும் வேலைத் திட்டங்களும இடமபெற வேண்டும்-

இம்மாநாடு சகல கட்டங்களிலும வெற்றி பெற வாழ்த்துவோம-

## வி. எம். பீ. ஷெய்க் முஹியித்தீன்

தாழ்வு யாவும மாதர்களிடம" இருக்கின்றன-

மகிழ்ச்சியும, ஆனந்தமும மண்டிக் கிடக்கும இவ் உலகில் பக்தியும ஒழுக்கமும, கண்ணியமுமிக்க மனைவியே பேரின்பத்தின் பொக்கிஷமாகும-

எனவேதான் இறுதி நபி (ஸல்) அவர்களும இலட்சிய மனைவியின் இலக்கணம பற்றி இவ்வாறு அருளினார்கள்-

"நீங்கள் பார்க்கும போது மகிழ்ச்சியடைகின்றவளும, உத்தரவிடும போது கீழ்ப்படிகின்றவளும, நீங்கள் தொலை தூரத்தில் இருக்கும போது உங்கள் கண்ணியத்தையும, பொருள்களையும காப்பாற்றக் கூடியவளுமே இலட்சிய மனைவியாக இருக்கிறாள்-" என்றார்கள் (2-38. 43, 73)

ஒரு மனிதன் பெருமை பாராட்டத்தக்க பாக்கியங்களில் மிகவும மேலான பாக்கியம நல் ஒழுக்கமான மனைவியேயாவாள்-

அவள் வீட்டிற்கு அரசியாக இருக்கிறாள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் அருளினார்கள்- (26-1)

இற்றைக்குச் சுமார் ஐயாயிரம ஆண்டுகளுக்கு முன்னர் இறைநேசர் ஹஜ்ரத் இப்றாஹீம (அலை) அவர்களும "நல்ல மனைவி எப்படி இருக்க வேண்டும? என்பதை இலக்கியச் சுவையுடனும, உயர்ந்த கருத்துக்களுடனும தன் மருமகளிடம கூறிச் சென்றார்கள்-

மாமனார் கூறிய சொற்களின் கருத்தை அப்பெண்கள் இருவரும விளங்கிக் கொள்ளவில்லை-

ஏனெனில் நபி இப்றாஹீம (அலை) அவர்கள் சிறந்த உவமையுடன் இல்லாளிடம இருக்க வேண்டிய பண்புகளைப் புதிராகக் கூறினார்கள் போலும-

அதாவது இலட்சிய மனைவியை நபி அவர்கள் வீட்டின் தலை வாசலுக்கு ஒப்பிட்டார்கள்-

சிய மனைவியின் இலக்கணத்தை இரத்தினச் சுருக்கமாக விளக்கினார்கள்-

இப்பரந்த உலகில் எவரும அழகை விரும்புவது இயற்கையே! எனவேதான், தாம வாழும வீட்டை அழகாக அமைத்துக் கொள்கிறார்கள்-

தாம அணிந்து கொள்ளும உடைகளிலும, ஆபரணங்களிலும அழகையே காணச் செய்கின்றோம ஏன்?

முகம என்றால் அது அலாதி அழகு எப்பொருள்களிலும முகம அழகாகவே இருக்கிறது-

மனிதன் முகம மலர்ச்சியாயிருந்தால் இன்பமாகவே இருக்கும மேலும வீட்டில் வசிப்பவர்களின் புனிதம வீட்டில் பெருமை யாவும அதன் தலைவாசலைப் பார்த்து அறிந்து கொள்ள முடியும-

"இல்வாழ்வின் தலைவாசல் நல்ல மனைவியே!"

இதைத்தான் இறைநேசர் சுவையாகச் சுட்டிக்காட்டினார்கள்-

அத்தகைய நல்ல பெண்மணியைப் பெற்ற மனிதன் மாதரசியை அன்பாக நடத்த வேண்டும-

அப்பெண்களிடம கனிவாக நடந்து கொள்ள வேண்டும இதற்காகத்தான் இப்றாஹீம (அலை) அவர்கள் நல்ல குணவதியான மருமகளைப் பார்த்து "உமது வாசற்படி நேராயிருக்கிறது" என்றும மற்ற மருமகளைப் பார்த்து "உமது கணவனார் வந்தால் எனது ஸலாம சொல்லி வாசற்படியைப் புரட்டிப் போடும்படி கூற வேண்டும" என்றும இரண்டு விதமாகக் கூறினார்கள்-

இம்மாபெரும நிகழ்ச்சியை

இஸ்மாயில் (அலை) அவர்களையும மக்காவில் குடியேற்றி விட்டுச் சென்றபின் பல காலம சென்றதும ஜுர்ஹும கூட்டத்தாரில் உள்ள ஒரு பெண்ணை ஹஜ்ரத் இஸ்மாயில் (அலை) அவர்கள் மணம செய்திருந்தார்கள்-

பிறகு ஹஜரத் இப்றாஹீம (அலை) அவர்கள் மக்கமா நகருக்கு வந்தபோது தமது மனைவியான பீபி ஹாஜரா இறந்து போனதைத் தெரிந்து கொண்டு ஹஜரத்

இஸ்மாயில் (அலை) அவர்களின் வீட்டுக்குச் சென்று அவர்களின் மனைவியிடம "உமது கணவர் எங்கே?" என்று கேட்டார்கள-

அதற்கு அந்தப் பெண், அவர் "வேட்டைக்குப் போயிருக்கிறார்" என்று கூறினார்-

அப்போது ஹஜரத் இப்றாஹீம (அலை) "உமமிடத்தில் ஏதேனும விருந்திருக்கிறதா?" என்று வினவினார்கள் அதற்கு அப் பெண் என்னிடத்தில் இல்லை" என்று கூறினார்-

பிறகு அவர்களுடைய குடும்ப சேமலாபங்களைப் பற்றி விசாரித்ததற்கு அந்தப் பெண் "நாங்கள் வறுமையிலும கஷ்டத்திலும இருக்கிறோம" என்று முறையிட்டார்-

அப்பொழுது இப்றாஹீம (அலை) அவர்கள் அப்பெண்ணிடம "உமது கணவர் வந்தால் எனது ஸலாம சொல்லி வாசற்படியைப் புரட்டிப் போடும்படி கூற வேண்டும" என்று கூறிவிட்டுச் சென்றார்கள்-

பின்னர் ஹஜரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் வந்து தமது தகப்பனார் அவர்களின் வாடை இருப்பதைக் கண்டு தமது மனைவியிடம "இங்கு வந்தது யார்"? என வினாவினார்கள்-

அதற்கு அப்பெண் "இன்ன

சொல்லி வாசற்படியைப் புரட்டிப் போடச் சொன்னார்" என்றார்-

உடனே இஸ்மாயில் (அலை) அவர்கள் தம மனைவியைப் பார்த்து "வந்தவர் என் தகப்பனார் வாசற்படி என்பது நீதான்-

உன்னைத் தலாக்குச் சொல்லி (விவாக விலக்கல), விட வேண்டும என்று கூறியிருக்கிறார்-

ஆகவே "நீ உன் பந்துக்களிடம போய்ச் சேர்" என்று கூறி அந்தப் பெண்ணைத் "தலாக்" சொல்லி அனுப்பி விட்டார்கள்-

பின்னர் அந்தக் கிளையாரில் மற்றொரு பெண்ணை இஸ்மாயீல் (அலை) அவர்கள் விவாகம செய்தார்கள்-

இவர்கள் இப்படி இருக்கும போது இப்றாஹீம (அலை) அவர்கள் மற்றொருமுறை மகனின் வீட்டிற்கு வந்து மருமகளிடம "உமது கணவர் எங்கே" என்று கேட்டார்கள்-

வேட்டைக்குப் போயிருக்கிறார். இன்ஷா அல்லாஹ் இப்பொழுது வந்து விடுவார். இறங்குங்கள் அல்லாஹ் உங்களுக்கு ரஹ்மத்துச் செய்வான்" என்று கூறினார்.

அப்போது இறைநேசர் அவர்கள் "உங்களிடம விருந்து இருக்கிறதா?" எனக் கேட்டார்கள்-

அதற்கு அவர் "ஆம" என்று கூறி பாலும இறைச்சியும கொண்டுவந்து கொடுத்தார்கள்

பிறகு இப்றாஹீம (அலை) அவர்கள் "உங்கள் சேமநலம் எப்படி?" என்று கேட்டதற்கு "நாங்கள் சேமமாக இருக்கிறோம" என்று கூறினார்கள்-

உடனே இப்றாஹீம (அலை) அவர்கள் மகனுக்கும மருமகளுக்கும "பரக்கத்"தைக் கொண்டு துஆச் செய்தார்கள்-

பின்னர் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களின் துணைவியான அப்பெருமாட்டி அரபு நாட்டு வழக்கப்படி குதிரையின் மீதிருந்த விருந்தினரின் கால்களைத் தம கையாலே கழுவினார்கள்-

ஆகவே நபி இப்றாஹீம (அலை) அவர்களின் இருகால் தடமும அக்கல்லில் பதிந்து விட்டது பின்னர் இறைநேசர் அவர்கள் தமது மருமகளைப் பார்த்து "உமது கணவர் வந்தால் அவருக்கு என் ஸலாம சொல்லி உமது வாசற்படி நேராயிருக்கிறது என்று சொல்ல வேண்டும" என்று கூறி விட்டுப் போயவிட்டார்கள்-

தம கணவர் இஸ்மாயீல் (அலை) வந்த பின்னர் அவரைக் கண்டுவிட்டுப் போகுமாறு அப் பெரியவரிடம அப்பெருமாட்டி எவ்வளவோ வேண்டிக் கொண்டார்கள்-

எனினும இறைநேசர் அவ்விடம விட்டு அகன்றார்கள்-

இஸ்மாயீல் (அலை) அவர்கள் வேட்டை முடிந்து வீட்டுக்கு வந்த போது தமது தகப்பானருடைய வாடையை அறிந்து "இங்கு வந்தது யார்" என்று கேட்டார்கள்-

அதற்கு அவர்களின் அன்பு மனைவி "வடிவழகு மணமுள்ள ஒரு வயோதிபர் வந்தார், அவருக்கு உபகாரம செய்தேன்- அவருடைய பாதார விந்தத்தின் அடையாளம இதோ இருக்கிறது- அவர் இன்னின்ன மாதிரி கூறினார் என்று சொன்னார்-

அப்போது இஸ்மாயில் (அலை) அவர்கள் தம மனைவியைப் பார்த்து "அவர் என் தகப்பனார்- வாசற்படி என்பது நீதான் உன்னைப் பத்திரமாய் வைத்துக் கொள்ளச் சொல்லி இருக்கிறார்" என்று விளக்கினார்கள்-

இதனை நமமுடைய முஸ்லிம மாதர்கள் கருத்திற் கொள்வார்களாக!

சிறந்த மனைவியர்களாக இஸ்லாம விரும்பும இலட்சிய மனைவியர்களாக வாழ்ந்து சிறப்பு அடைவார்களாக!

ஆமீன் யாரப்பல் ஆலமீன்!

மாலைதீவு தேசிய கிரிக்கெட் போட்டி

# மத்தியஸ்தர்களாக இலங்கையர் இருவர்

## அனுபவசாலிகளான பொன்னுத்துரை, விக்ரமசிங்க ஆகியோர் தெரிவு

கொழும்பு மார்ச் 15

மாலை தீவில் நடத்தப்பட விருக்கும் அந்நாட்டின் தேசிய கிரிக்கெட் போட்டியில் இலங்கையின் இரு அனுபவம் வாய்ந்த மத்தியஸ்தர்கள் கடமையாற்றவுள்ளனர்.

மாலைதீவு இலங்கைத் தூதுவர் இரு மத்தியஸ்தர்களைத் தந்துதவுமாறு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு விடுத்த வேண்டுகோளையடுத்தே திறமை வாய்ந்த மத்தியஸ்தர்களான உதயா விக்ரமசிங்க மற்றும் எஸ் பொன்னுத்துரை ஆகியோரை மாலைதீவுக்கு அனுப்பி வைக்க மேற்படி சபை இசைந்தது.

இவ்விருவரும் இரு வார காலம் மாலைதீவில் தங்கி ஆட்டங்களில் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றுவார்கள்.

மத்தியஸ்தர் எஸ் பொன்னுத்துரை சர்வதேச தர கிரிக்கெட் நடுவராவார். இலங்கை டெஸ்ட் மத்தியஸ்தர் சபை உறுப்பினரான இவர் பல டெஸ்ட் ஆட்டங்களில் நடுவராக கடமையாற்றி அனுபவம் பெற்றவர்.

1978 ஆம் ஆண்டு சரவணமுத்து அரங்கில் இலங்கை இந்திய டெஸ்ட் அணிகள் இடையே நடைபெற்ற புகழ் பெற்ற ஆட்டத்தில் இவர் நடுவராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த டெஸ்ட்டிலேயே இலங்கை தன் முதல் டெஸ்ட் வெற்றியை ஈட்டியது.

உதயா விக்ரமசிங்க நடுவராக மட்டுமன்றி கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராகவும் தகைமை பெற்றவராவார். இவர் இங்கிலாந்தில் பல முதல்தர ஆட்டங்களுக்கு மத்தியஸ்தராக விளங்கி அனுபவம் பெ[illegible].

இங்கிலாந்த கிரிக்கெட் ஆட்டங்களில் முதல் தடவையாக பங்கு பற்றிய இலங்கை நடுவர் என்ற பெயர்பெற்ற இவர் கடந்த ஆண்டு மஸ்கட் நகரில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டங்களுக்கும் நடுவராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ—032)

## பேருவளை நகரில் நவீன விளையாட்டரங்கு

### இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உறுதி

கொழும்பு மார்ச் 15

பேருவளை நகர் மத்தியில் நவீன விளையாட்டரங்கு ஒன்று அமைக்கப்படும்—

இவ்வாறு கூறினார் வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்—

பேருவளை நகர எழுச்சி கிராம எழுச்சித் திட்டங்களின் கீழான விளையாட்டுப் போட்டிப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது—

இந்த விழாவிற்கு ராஜாங்க அமைச்சர் தலைமை வகித்தார்— விழா பேருவளை மாளிகாஹேன முஸ்லிம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது—

அவர் தொடர்ந்து கூறியதாவது—

பேருவளை நகர் மத்தியில் இருந்த விளையாட்டு மைதானம் அரசியல் பழிவாங்கல் காரணமாக அழிக்கப்பட்டு விட்டது— இதனால் விளையாட்டு வீரர்கள் பல கஷ்டங்களை அனுபவித்தனர்—

இக்குறையைத் தீர்ப்பதற்காக நகர மத்தியில் நவீன விளையாட்டரங்கொன்று அமைக்கப்படும்—

இவ்வாறு அவர் கூறினார்— விளையாட்டுத்துறை ராஜாங்க அமைச்சர் திரு டீ எம் ஆரியதாசாவும் உரையாற்றினார்—

(எ—007)




**விளையாட்டு பகுதி**

## கண்டியில் இன்று கிரிக்கெட் மோதல்

கொழும்பு மார்ச் 15

மலையகத்தின் பிரபல பாடசாலைகளுக்கான கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் (16 ஆம் 17 ஆம்) திகதிகளில் கட்டுகஸ்தோட்டை மைதானத்தில் நடைபெறும்—

இப்போட்டி கண்டி திரித்துவ கல்லூரிக்கும், கட்டுகஸ்தோட்டை சென் அந்தோனியார் கல்லூரிக்குமிடையில் நடைபெறும்—

கண்டி சென் சில்வெஸ்டர் கல்லூரிக்கும் வித்தியார்த்த கல்லூரிக்குமிடையிலான "பிக்மெட்ச்" கண்டியில் இடம்பெற உள்ளது—

(எ—455)

## தஞ்சம் ஏற்க மறுத்த தமிழ் நாடு மீது இலங்கை தமிழ் அகதிகள் வெறுப்பு

### "ஹிந்து"வில் பேட்டி

கொழும்பு, மார்ச்— 15

அகதி[illegible] சென்ற தம்மை ஏற்றுக் கொள்ளா[illegible] ஒரிஸ்ஸாவில் உள்ள இலங்கை தமிழ் அகதிகள் தமிழ் நாடு அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்திருக்கிறார்கள்.

அகதிகளை பேட்டி கண்ட ஹிந்து பத்திரிகை நிருபர் ஒருவர் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்,

இலங்கை அகதிகளில் ஈ பி ஆர் எல் எப் ஆதரவாளர்கள் சட்டிகுடா நீர்ப்பாசன அணைக்கட்டு அருகே உள்ள முகாமிலும், ஈ என் டி எல் எப் ஆதரவாளர்கள் மல்கானகிரி முகாமிலும் தங்கி இருப்பதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது,

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது—

திருகோணமலையில் இருந்து கடந்த சனிக்கிழமை புறப்பட்ட 1335 அகதிகள் 4 நாட்கள் கழித்து ஒரிஸ்ஸாவிலுள்ள முகாம்களை வந்தடைந்துள்ளனர்,

அச்சமும் அங்கலாய்ப்பும், வெறுப்பும், ஒருவித நிம்மதியும் அகதிகளின் முகங்களில் பிரதிபலித்தன.

புலிகள் இயக்கத்தின் பேச்சைக் கேட்டு தமிழ்நாடு முக

லையே எதிர்பார்த்து வெளியேறினோம்.

அந்த உரிமை எங்களுக்கு மறுக்கப்பட்டது,

இப்படி அவர் கூறினார்,

ஈ பி ஆர் எல் எப் ஆதரவாளர்கள் இருக்கும் முகாமிலேயே 60ஆம் ஆண்டுகளில் [illegible]க்கு பாகிஸ்தான் அகதிகள் த[illegible]ருந்தனர்,

தாம் கப்பலில் ஏற்றப்பட்ட பின் தமக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டதாக அகதிகள் தெரிவித்தனர்,

அதிகாரிகள் கருணையுடையவர்கள், அவர்களுடன் பேச மொழி தெரியாதிருந்த போதிலும், உயர் அதிகாரிகளுடன் ஆங்கிலத்தில் பேச முடிந்தது.

இப்படி ஆறுமுகம் என்னும் அகதி கூறினார், அவர் மனைவியுடனும், குழந்தையுடனும் அங்கு வந்திருந்தார்,

முகாமில் எப்படி நடந்து கொள்வது என்பதைப் பற்றி அகதிகளின் தலைவர் ஒருவர் முகாமில் உள்ள ஒலிபெருக்கி மூலம் விளக்கினார்,

ஒரிஸ்ஸா மக்கள் அகதிகளின் வருகையை விரும்பவில்லை என்பதை சுட்டிக்காட்டிய போது எம் பி திரு கே பிரேமசந்திரனின் பிரதிநிதியாக அங்கு வந்திருந்த குகன் என்பவர் கூறியதாவது—

ஒரிஸ்ஸா மக்களின் பிரச்சினைகளை நாம் உணர்கிறோம். எமக்கு புகலிடம் கொடுத்த இந்திய அரசையோ அல்லது ஒரிஸ்ஸா மாநில அரசையோ நாம் அசௌகரியத்திற்குள்ளாக்க மாட்டோம்,

இப்படி அவர் கூறினார், என ஹிந்து பத்திரிகை செய்தியில் குறிப்பிட்டுள்ளது,

(ல—ற)

## வானொலி

### 16—3—1990 வெள்ளி

காலை —

5–00 நாதாஞ்சலி
5–05 திருமுறைப்பாடல்கள் — ஞானகுமாரி சிவநேசன்
5–30 பாமாலை - முருகன் பிள்ளைத்தமிழ் - பொன் சுந்தரலிங்கம்
5–45 சைவ நற்சிந்தனை
5–50 இஸ்லாமிய நற்சிந்தனை கலாநிதி அல்ஹாஜ் [illegible] தொகுப்பு
8–50 கிறாஅத்
8–55 வரலாற்றில் ஓர் ஏடும் குறிப்பும் ஸலவாத்தும்
9–00 செய்திகள்
9–10 அறிவிப்புகள்
9–20 பக்திப் பாடல்கள்
9–30 செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்—க சி குலரத்தினம்
9–45 கதாப்பிரசங்கம் - வள்ளலார் - சிவஅன்பு
10–30 நினைவில் நிறைந்தவை
11–00 ஒலிபரப்பு முடிவு

### 17—3—1990

காலை

5–00 நாதாஞ்சலி
[illegible]
7–00 குன்றின் குரல் தொகுப்பு ஜோசப் ராஜேந்திரன்
7–30 மெல்லிசைப் பாடல்கள்
7–50 உலகச் செய்திகள்

இரவு

8–00 முஸ்லிம் நிகழ்ச்சி
8–00 தர்ஜுமதுல் குர்ஆன்
8–05 நேயர் குரல்
8–15 அஸ்மாவுல் ஹுஸ்னா
8–25 முஸ்லிம் செய்திகள்
8–30 இளைஞர் இதயம் நடத்துபவர் செய்யது ஏ மௌலானா
8–50 இஸ்லாமிய கீதம்
8–55 வரலாற்றில் ஓர் ஏடும் குறிப்பும் ஸலவாத்தும்
9–00 செய்திகள்
9–10 அறிவிப்புகள்

## சேவைகள்

### மார்ச் 16 (வெள்ளிக்கிழமை)

#### வந்து சேரும் நேரம

| | | | |
|---|---|---|---|
| 0520 | பஹ்ரேன் | யூ எல் | 142 |
| 0530 | குவைத் | கே யூ | 361 |
| 0620 | லண்டன், துபாய் | யூ எல் | 504 |
| 0745 | ஜெத்தா, ரியாத் | எஸ் எல் | 340 |
| 1225 | பாஙகொக் | ரி ஜி | 307 |
| 2000 | சிஙகப்பூர் | யூ எல் | 303 |
| 2100 | மாலைதிவு | யூ எல் | 102 |
| 2235 | சிஙகப்பூர் | எஸ் கியூ | 402 |

#### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0115 | பாரிஸ், சிப்போல், அபுதாபி | யூ எல் | 563 |
| 0130 | துபாய், சோபியா | எல் இசட் | 582 |
| 0200 | ரோம | யூ எல் | 581 |
| 0230 | துபாய், சூரிச், பிராஙபோர்ட் | யூ எல் | 547 |
| 0635 | பஹ்ரேன் | ஜீ எப் | 142 |
| 0720 | குவைத் | கே யூ | 361 |
| 0915 | ரியாத் | எஸ் பி | 340 |
| 0930 | சிஙகப்பூர் | யூ எல் | 302 |
| 1325 | பாஙகொக் | ரி ஜி | 307 |
| 1730 | மாலைதிவு | யூ எல் | 101 |
| 2330 | துபாய், லண்டன் | யூ எல் | 503 |
| 2350 | சிஙகப்பூர் | எஸ் கியூ | 402 |

### மார்ச் 17 (சனிக்கிழமை)

#### வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0405 | மஸ்கட் | ஜீ எப் | 3144 |
| 0540 | ரோம் | யூ எல் | 582 |
| 0700 | துபாய் | ஈ கே | 802 |
| 0715 | சிப்போல், பாரிஸ் | யூ எல் | 564 |
| 0740 | பிராஙபோர்ட், சூரிச், துபாய் | யூ எல் | 548 |
| 0300 | சிப்போல, தஹ்ரான், கராச்சி | கே எல் | 801 |
| 1105 | திருச்சி | யூ எல் | 132 |
| 1140 | சென்னை | ஐ சி | 573 |
| 1145 | மாலைதீவு | ஈ கே | 803 |
| 1300 | மாலைதீவு | யூ எல் | 102 |
| 1545 | திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1755 | பமபாய் | ஐ சி | 586 |
| 2235 | சிஙகப்பூர் | எஸ் கியூ | 402 |
| 2245 | சென்னை | யூ எல் | 122 |
| 2330 | சிஙகப்பூர் | யூ எல் | 303 |
| 2350 | ஹொஙகொங, பாங்கொக் | யூ எல் | 423 |

#### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0520 | மஸ்கட் | ஜீ எப் | 3144 |
| 0800 | மாலைதீவு | ஈ கே | 802 |
| 0815 | திருச்சி | யூ எல் | 131 |
| 0845 | பாஙகொக், ஹொஙகொங | யூ எல் | 422 |
| 0900 | மாலைதீவு | யூ எல் | 101 |
| 0930 | சிஙகப்பூர் | யூ எல் | 302 |
| 1235 | பமபாய் | ஐ சி | 573வீ |
| 1245 | துபாய் | ஈ கே | 803 |
| 1300 | திருவனந்துபுரம | யூ எல் | 161 |
| 1730 | பஹ்ரேன் | யூ எல் | 201 |
| 1840 | சென்னை | ஐ சி | 586 |
| 1915 | சென்னை | யூ எல் | 121 |

குறிப்பு— யூ எல் — எயர் லஙகா, ஐ சி — இந்தியன் எய லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் ஏஸ் யூ — ஏரோ புளோட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிஙகப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ் எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங எயர் லைன்ஸ் ரி ஜி — தாய் எயர் வேய்ஸ், பி ஐ — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத்தியேக சேவை, கே எல் —ரோயல் எயர் லைன்ஸ்,

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் 452218 (விமான நிலையம)

(கு)

புலிகள் இயக்கத்தின் பேச்சைக் கேட்டட தமிழநாடு முதலமைச்சர் திரு மு கருணாநிதி தமக்கு இடமளிக்கவில்லை என ஈ பி ஆர் எல் எப் உறுப்பினர் ஒருவரான சுகுமார் என்பவர் கூறினார்,

அகதிகள் புலிகளாக இருந்தால் அவர்களுக்கு திரு கருணாநிதி இடமளிக்காமல் இருப்பாரா? என்று அவர் கேட்டார்,

எமமில் சிலர் இலங்கை அரசுக்கும, புலிகள் இயக்கத்துக்கும எதிராக ஆயுதம ஏந்தியது உணமைதான், இதனால் நாம புலிகளை விட கொடியவர்களாக விட்டோமா?

மட்டக்களப்பிலும, திருகோணமலையிலும பதற்றத்தை ஏற்படுத்தும இயக்கம புலிகளா? இல்லாவிட்டால் ஈ பி ஆர் எல் எப்பா?

அந்த உண்மையை ஏன் திரு கருணாநிதி காணவில்லை,

புலிகளினதும, இலங்கைப் படைகளினதும கூட்டு படுகொலைகளை எதிர்நோக்க முடியாத நாம இலஙகையில் இருந்து வெளியேறினோம,

ஆயுதம இல்லாது, அநாதரவாக நாம இங்கும அங்கும அலைநது திரிய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம,

இப்படியா தமிழ் நாடு முதலமைச்சர் இலஙகை தமிழர்களின் நலன்களை பாதுகாக்கிறார்?,

இப்படி அவர் கூறினார்,

தமிழ் நாட்டில் உள்ள புலிகளால் உங்களுக்கு ஆபத்து நேரக்கூடாது என்பதற்காக நீங்கள் அங்கு வரக்கூடாது என்று கூறியிருக்கலாம அல்லவா? என பத்திரிகையாளர் ஒருவர் கேட்டதற்கு எமக்கு அப்படி அச்சம எதுவும இல்லை,

இலஙகைப் படையின் உதவியின்றி புலிகள் எவ்வித அச்சுறுத்தலையும செய்ய முடியாது,

நாம நாட்டை விட்டு வெளியேறும போது ஒரு தமிழ் தூழ

5-50 இஸ்லாமிய நற்சிந்தனை கலாநிதி அல்ஹாஜ் எம ஏ எம சுக்ரி
5-55 போதிமாதவனின் போதனைகள்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம தொடர்ந்து அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-30 பாடசாலைக் கூட்டு நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 வாத்திய மஞ்சரி
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 உருதுமஞ்சரி
9-00 வர்த்தக சேவை

பகல் —
10-00 இசையமுதம
10-30 பக்திமஞ்சரி
11-00 நாதஸ்வரம — திருவிழா ஜெய்சஙகர்
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 திருவாசகம — எஸ் கணபதிப்பிள்ளை
6-45 துதிப்பாடற் பயிற்சி — வி எம நவரட்ணம
7-00 களத்துமேடு — கேள்வி பதில்
7-15 விவசாய நாடகம — வயலோடு வசந்தஙகள்
7-30 தவக்கால கத்தோலிக்க நிகழ்ச்சி — மலர்வேந்தன்
7-50 உலகச் செய்திகள்

இரவு —
8-00 தர்ஜுமதுல் குர்ஆன்
8-05 சமூகச்சித்திரம ஊடுருவல் பிரதி திக்குவல்லை ஸும்ரி
8-15 கவிதைச்சரம தொகுப்பு— பாவலர் பஸீல் காரியப்பர்
8-30 குத்பா பிரசஙகம "வியங்கல்ல ஜும்ஆப் பள்ளி வாசலில் நடைபெற்ற குத்பாப் பிரசஙகத்தின்

காலை
5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை ஸ்ரீவெஙகடேச சுப்ரபாதம
5-30 பாமாலை சனீஸ்வரன் தோத்திரம ப முத்துக்குமார சுவாமி சர்மா
5-45 சைவநற்சிந்தனை
5-50 கிறிஸ்தவநற்சிந்தனை
5-55 பக்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம தொடர்ந்து அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 வீணை மணி சஙகர சாஸ்திரி
8-15 தமிழ் மூலம சிஙகளம என் டீ பீரிஸ்
8-30 மாணவர் மன்றம நடத்துபவர் எம எச் பௌசுல் அமீர்
9-00 வர்த்தக சேவை

பகல்
10-00 கல்வியரஙகம
10-30 அறிவுச் சுடர் —தொகுப்பு தே எஸ் பாலச்சந்திரன்
11-00 இசையமுதம
11-30 ஓடி விளையாடு பாப்பா நடத்துபவர் ரேலஙகி செல்லையா
11-45 அரஙகேற்றம
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 ஞானக் கோவை
6-30 இசைப் பயிற்சி நடத்துபவர் ஏ எஸ் நாராயணன்
6-45 நாட்டுப் பாடல்கள் எல் திலகநாயகம போல்

9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 நாடகம ஆற்றில் விழுந்த மலர் எழுதியவர் அகலஙகன்
10-00 வீணை சுந்தரலட்சுமி செல்வராஜா
10-45 பஜன் எம எஸ் சுப்புலக்ஷ்மி
11-00 ஒலிபரப்பு முடிவு




16—3—1990

### ரூபவாஹினி

4-30 கல்வி நிகழ்ச்சி
5-00 செய்திகள் — சிஙகளம
5-30 டிக்கிரி
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 கார்ட்டூன் படம
6-30 செய்திகள் — தமிழ்
6-55 ஒளிஒலி
7-25 விவரணச் சித்திரம
8-00 செய்திகள் — சிஙகளம
8-30 இசுருசொயா
9-00 லொட்டோ ட்ரோ
9-30 செய்திகள் — ஆஙகிலம
10-00 தமிழ்த் திரைப்படம
11-45 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என.

6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 மெடிசினல் டிரக்ஸ்
6-30 செய்திகள் — சிஙகளம
7-00 கீத்தாஞ்சலி
7-30 மியுசிக்கல் ஷோகேஸ்
8-00 வொண்டர் ஸ்ட்ரக்
8-30 மெயின் சான்ஸ்
9-30 எ பேர் பெக்ட் ஸ்கை
10-00 செய்திகள் — ஆஙகிலம
10-26 எ பேர்பெக்ட் ஸ்கை
10-45 ஒளிபரப்பு முடிவு

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# உணவுபொருள் உற்பத்தி அபிவிருத்திக்கு ரூ. 61 கோடி

## ஜப்பான் அரசு வழங்கியது

கொழும்பு மார்ச் 15
உணவு உற்பத்தி அபிவிருத்தியின் பொருட்டு ஜப்பானிய அரசாங்கம் 61 கோடி ரூபாவை இலங்கைக்கு வழங்கியுள்ளது—

இதற்கு வகை செய்யும் உடன்படிக்கை நேற்று முன்தினம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது—

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக நிதியமைச்சின் செயலாளர் ஆர் பாஸ்கரலிங்கமும் ஜப்பானிய அரசாங்கத்தின் சார்பில் அந்நாட்டு தூதவர் இஸமு நிட்டாவும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்—

ஜப்பானிய நன்கொடையைப் பயன்படுத்தி இலங்கை தனக்குத் தேவையான பசளை வகைகளைக் கொள்வனவு செய்ய முடியும்—

உணவு உற்பத்தி அபிவிருத்தியின் பொருட்டு ஜப்பானிய அரசாங்கம் 1977 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு உதவியளித்து வந்துள்ளது— இந்த நன்கொடை 13 ஆவது தடவையாக இவ்வரிசையில் வழங்கப்பட்டதாகும்— முன்னைய தடவைகளில் ஜப்பானிய அரசு உர வகைகளையும் விவசாய இயந்திரங்களையும் வழங்கி வந்துள்ளது—

பல்வேறு வகையான பயிர்களை முறையில் செய்கை பண்ண பசளை வகைகள் மிக அவசியம் என்பதினாலேயே ஜப்பான் இலங்கைக்கு உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் உதவி வழங்கி வருகிறது—
[ல—032]

# ரமழானில் முஸ்லிம்களின் பாவனைக்கு பேரீச்சம்பழம்

## சவூதி மன்னர் அன்பளிப்பு

கொழும்பு மார்ச் 15
ரமழான் மாதத்தில் முஸ்லிம்களின் பாவனைக்கென சவூதி அரேபிய மன்னர் பஹ்த் ஒரு லட்சத்து 40 ஆயிரம் கிலோ பேரீச்சம் பழங்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்தப் பழங்களின் பெறுமதி 50 லட்சம் ரூபாவாகும்.

இந்தப் பழங்கள் இலங்கையில் சகல ஜும்மாப் பள்ளிவாசல்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட இருக்கின்றன.

கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்களுக்கான பேரீச்சம் பழங்கள் நேற்று முன்தினம் வர்த்தக கப்பற்றுறை அமைச்சில் வைத்து கையளிக்கப்பட்டன—

கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கான பழத்தொகையை அமைச்சர் மன்சூர் பள்ளிவாசல் பிரதம நம்பிக்கை பொறுப்பாளரிடம் கையளித்தார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் ஜனாப் எம் எல் எம் அபுசாலி எம் பிக்களான அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர், எம் எச் ஆமித், யூ எல் எம் பாரூக், எம் எல் எம் ஏ ஹிஸ்புல்லாஹ், எஸ் எஸ் எம் அபூபக்கர், எம் ஏ அப்துல் மஜீது ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.
(ல—ற)

### மாநாடு


கொழும்பு மார்ச் 15
அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவையின் நாற்பதாவது வருடாந்த மாநாடு எதிர்வரும் 18ஆம் திகதி காலை தெமட்டகொடையிலுள்ள பேரவையின் தலைமையகத்தில் நடைபெறும். (ல—007)

## 720 ஆட்கொணர்வு வழக்குத் தாக்கல்

கொழும்பு, மார்ச் 14
1987 ஆம் ஆண்டுக்கும், 1989 மார்ச் 15க்கும் இடையில் 720 ஆட்கொணர்வு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன— அவற்றில் 310 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன—

நீதித்துறை, நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு வின்சன்ட் பெரேரா நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்—

டாக்டர் நெவில் பெர்னாண்டோ (சு க எம் பி)யின் வாய்மூல வினாவுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார்—



கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கான பழத்தொகையை அமைச்சர் மன்சூர் பள்ளிவாசல் பிரதம நம்பிக்கை பொறுப்பாளரிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படம், கொழும்பு மேயர் ஜனாப் ஹுசைன் முகம்மது அம்பாந்தோட்டை மாவட்ட எம் பி அல்ஹாஜ் ஷாபி மஹ்ரூப் (அமர்ந்து) ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்— [ல—ற]

## மத்திய மா. சபையில் ஆளுங் கட்சியினர் வெளிநடப்பு

கண்டி மார்ச் 14
மத்திய மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் (ஐ தே க) கடந்த செவ்வாய்க்கிழமை சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனர்—

எனினும் எதிரணியினர் கொண்டுவந்த ஒரு பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டது—

மத்திய மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது—

[illegible] தின் பின்னர் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது—

இவ்வேளை ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்—

எதிர்க் கட்சியினர் வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர்—

பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக சபைத் தலைவர் அறிவித்தார்—

கூட்டம் நடைபெற்ற வேளை முதல்வர் திரு டபிள்யூ பி பீ திசாநாயக்க சபையில் இருக்கவில்லை— [ல—ந—017]

## அமைப்பாளர் சிபார்சு குழுவில் அனுரா இனி கலந்து கொள்ள மாட்டாராம்

கொழும்பு மார்ச் 15
அரசியல் ரீதியாக எனக்கு கேடு விளைவிக்கவும், ஸ்ரீ ல சு கட்சியின் அடுத்த தலைமைத்துவத்திற்கெனவும் வெளிநாட்டில் இருந்து ஒருவரை அழைப்பதாக பல பத்திரிகைகள் மூலம் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கட்சியின் நிலைப்பாடு இதுவரை வெளியிடப்படவில்லை.

தொடர்ந்தும் இதனைப் பொறுத்துக் கொண்டு மௌனமாக இருக்க முடியாது.

எனவே எனது தலைமையில் இயங்கும் கட்சி அமைப்பாளர்களை சிபார்சு செய்யும் குழுவில் இனி நான் கலந்து கொள்வதில்லை.

ஸ்ரீ ல சு கட்சியின் கம்பஹா மாவட்ட எம் பியும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அனுரா பண்டாரநாயக்கா கட்சியின் செயலாளர் திரு ஜே ஆர் பி சூரியப்பெருமாளுக்கும், ஏனைய அரசியல் குழு உறுப்பினர்களுக்கும் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது—

சகல தேர்தல் தொகுதிகளிலும் தற்போதுள்ள அமைப்பாளர்களைப் பற்றியும் ஆராய்ந்து எதிர்கால அமைப்பாளர்களை சிபார்சு செய்த அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கட்சியின் மத்திய குழு எனது தலைமையில் குழு ஒன்றை நியமித்துள்ளது.

எதிர்கால மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகள் தேர்தல்களின் போது போட்டியிடும் வேட்பாளர்கள் அதற்காக தயாராவதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

எம் பிக்களினது கருத்துக்களையும் ஆராய்ந்து குடும்ப உறவு முறைகளை பாராது அமைப்பாளர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களை மேற்படி குழு சிபார்சு செய்தது.

எனது தலைமையிலான அந்தக் குழுவின் சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப் படுவதாக தெரியவில்லை.

எனவே அந்தக் குழுக் கூட்டங்களில் இனிக் கலந்து கொள்வதில்லை என நான் தீர்மானித்துள்ளேன்.

குழுவின் சிபார்சுக்கு முரணாக ரத்கம அமைப்பாளர் பதவியிலிருந்து திரு அனுர டி சொய்ஸா நீக்கப்பட்டார்.

அவர் திறமையானவராயினும், தனிப்பட்ட காரணங்களுக்காக அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

நிலைமை இப்படி இருக்க தொடர்ந்து தேர்தல்களில் தோல்வியடைந்த ஒருவர் என்ன அடிப்படையில் தேசிய பட்டியலின் மூலம் நாடாளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டார்? [illegible] கும் போது திரு அனுர டி சொய்ஸா நீக்கப்பட்டமை கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

கட்சித் தலைமையை விமர்சித்தார் என்பதற்காக திறமையான அமைப்பாளரான தெல்லை மகாராமை அமைப்பாளர் திரு மேர்வின் டி சில்வா அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

ஆனால் நுகேகொடை கூட்டமொன்றில் பேசி கட்சித் தலைமையை அசௌகரியத்திற்குள்ளாக்கிய திரு திலக் கருணாரத்னவிற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை ஆச்சரியத்திற்குரியதாக இருக்கிறது.

தற்போது நாட்டில் ஜனநாயகம் சிதைந்து வருகிறது.

அந்த நிலையை விமர்சித்து வரும் எமது கட்சிக்குள் விவகாரங்கள் ஜனநாயக ரீதியாகவும் நீதியாகவும் நடைபெற வேண்டும்.

கட்சிக்குள் பிணக்குகள் ஏற்படும் என்ற காரணத்தினால் இந்த அநீதிகள் சம்பந்தமாக நான் முன்னர் பேசவில்லை.

ஆனால் அண்மையில் இருந்து கட்சியில் சிலர் பத்திரிகைகள் மூலம் எனக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகிறார்கள்.

இதன் மூலம் அவர்கள் கட்சி அங்கத்தவர்களிடையேயும் பொது மக்கள் மத்தியிலும் என்னைப் பற்றி தவறான அபிப்பிராயத்தை வளர்க்க முயற்சித்து வருகிறார்கள்.


எனவே இனியும் மௌனமாக இருக்க முடியாது.

[illegible]

— கண்டி —

மலாய் ஜும்ஆ பள்ளிவாசல் கட்டிடம்






அன்பின் முஸ்லிம் சகோதரப் பெருமக்களே!
அஸ்ஸலாமு அலைக்கும்

* ஜும்ஆ தொழுகைக்கும
* ஹிப்லுல் குர்ஆன் அரபு மத்ரஸாவுக்கும ஏற்றதான மேற்படி எமது பள்ளிவாசலின் நான்கு மாடிக் கட்டிடப் பணிகள் அல்லாஹ்வின் அருட்கொடையாலும உங்களின் முயற்சியாலும நிறைவேறி விட்டன-
* தினபதியில் வெளியான எமது விளம்பர வேண்டுகோளுக்கு ஆதரவு நல்கிய உங்களுக்கு எமது நன்றிகள்-
* புனித நோன்பு அண்மித்து விட்டது- அல்லாஹ்வை சுஜூது செய்யும அந்த புனித தலத்தை "தராசோ" கொண்டு செப்பனிட வேண்டும-
* ஒரு சதுர அடி "தராசோ" போடுவதற்கு 40/- ரூபா மட்டுமே- விரும்பிய அளவில் தாராளமாக நீங்களும இதனை வழங்கலாம-
* இப்புனித பணிக்கு உதவுவோரை அல்லாஹ் ஆதரித்துக் காப்பானாக-

நீங்கள் உதவ வேண்டிய முகவரி-

Alhaj A M Ismail
CHF Trustee. Malay Jummah Mosque
161, Peradeniya Road
Kandy —

A/c No: 01—0013765—01
Cemmercial Bank of Ceylon Limited Kandy


குயின்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது-

சபைத் தலைவர் திரு டி பி சமரதுங்க கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்-

எதிர்க்கட்சியின் கொறடாவான சட்டத்தரணி திரு லால் விஜேநாயக்க ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து பேசினார்-

மத்திய மாகாணத்தில் இருக்கும் தோட்டங்களை உள்நாட்டு வெளிநாட்டுத் தனியார் துறையினரிடம கையளிக்கக் கூடாது-

தோட்டங்களில் ஊழல்களும மோசடிகளும அதிகரித்து வருகின்றன- இவற்றைத் தடுத்து நிறுத்த வழி காண வேண்டும-

தோட்டங்களை மக்கள் மயமாக்குவதில் தொழிலாளர்களுக்கு முக்கிய பங்களிப்பு இருக்க வேண்டும-

இப்படித் திரு லால் விஜேநாயக்க தமது பிரேரணை மீது பேசினார்-

இதனை வழிமொழிந்து எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு ஓ ஏ இராமையா பேசினார்-

இந்தப் பிரேரணை விவாதத்

## சாரதிகளுக்கான பயிற்சி நெறி

கொழும்பு மார்ச் 15

எதிர்வரும 19 ஆம 20ஆம திகதிகளில் கம்பஹா கச்சேரியில் தனியார்துறை மற்றும அரசாங்க பஸ் சாரதிகளுக்கென பயிற்சி நெறி ஒன்று நடை பெறவுள்ளது-

சித்திபெறுவோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும-

சான்றிதழ்கள் வழங்கப்படும வைபவத்தில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு விஜேபால மெண்டிஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்-

[ல—455]

வேளை முதல்வர் திரு டபிள்யூ பீ பீ திசாநாயக்க சபையில் இருக்கவில்லை- [ல—ந—017]

ளர்களைப் பற்றியும ஆராய்ந்த எதிர்கால அமைப்பாளர்களை சிபார்சு செய்த அறிக்கை சமர்ப்

## சபையில் கேட்டவை

லக்ஷ்மன் கிரிஎல்ல (ஸ்ரீ ல சு க) டி எஸ் சேனாநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சி இல்லாமல் ஒழித்த பிரஜா உரிமையை நாம சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம வழங்கினோம-

அஸ்வர் (பிரதி கொறடா)- பிரஜா உரிமை சட்டத்தை நாம கொண்டு வந்த போது ஸ்ரீ ல சு கட்சி அதனை எதிர்த்தது-

லக்ஷ்மன் கிரிஎல்ல (ஸ்ரீ ல சு க)- நாங்கள் தமிழர்களுக்கு [illegible]- ஐந்து லட்சம இந்தியர்களுக்கு முதன் முதலாக ஒப்பந்தத்தின் மூலம பிரஜா உரிமை வழங்கினோம என்பதை மறந்து விட வேண்டாம-

வீரசிங்க மல்லிமாராச்சி (ராஜாங்க அமைச்சர்)- டி எஸ் சேனாநாயக்கா அரசு பிரஜா உரிமை சட்டத்தை கொண்டு வந்த போது பண்டாரநாயக்காவும தானே அந்த அமைச்சரவையில் இருந்தார்-

லக்ஷ்மன் கிரிஎல்ல உங்களுடைய சர்வாதிகாரப் போக்கு பிடிக்காததனால் தான் அவர் தனியான கட்சியை ஆரமபித்து வெற்றி பெற்றார்-

தோட்டத் தொழிலாளர்களுக்குப் பட்ஜெட் சமபள உயர்வு 200 ரூபா வழங்கப்பட வேண்டும-

ஜனாப் அபுசாலி இராஜாங்க அமைச்சர்- தோட்டத் தொழிலாளர்கள் இதைவிட கூடுதலான சமபள உயர்வைப் பெற்றுள்ளனர்-

லக்ஷ்மன் கிரிஎல்ல- அமைச்சர் தவறாக இங்கு கூற வேண்டாம- அரச ஊழியர்களுக்கு மட்டுமே 200 ரூபா சமபள உயர்வு வழங்கப்பட்டுள்ளது-

அபுசாலி- இல்லை தேயிலை விலை அதிகரிக்கப்படும போது எல்லாத் தொழிலாளர்களுக்கும சமபள உயர்வு வழங்கப்படுகிறது- இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றும உண்டு-

லக்ஷ்மன் கிரிஎல்ல! அப்படியானால் அவர்களுடைய நாள் சமபளம எவ்வளவு?

அபுசாலி- தினசரி அவர்களுடைய சமபளம அறு ரூபாவால் அதிகரிக்கின்றது- தேயிலை விலை அதிகரிக்கப்படும போது அந்த அடிப்படையில் மேலும உயர்வு ஏற்படுகிறது-

லக்ஷ்மன் கிரிஎல்ல- உங்களுடைய கூற்றின்படி இருநூறு ரூபா கிடைக்கவில்லையே-

அபுசாலி- பொறுத்திருந்து பாருங்கள்-

லக்ஷ்மன் கிரிஎல்ல- ஒரு சில தோட்டங்களில் பிரேதங்களை அடக்கம செய்யக் கூட மயானம இல்லை-

தி மு ஜயரத்ன (ஸ்ரீ ல சு)- அதைப் பற்றி இப்போது கவலைப்பட வேண்டாம- அதற்குத்தான் இப்போது டயர்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன-

(ல-ய)

அடிப்படையில் தேசிய பட்டியலின் மூலம நாடாளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டார்?

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது திருமதி பண்டாரநாயக்க போட்டியிடக் கூடாது என்று கேட்டுக் கொண்ட ஒருவர் தேசிய பட்டியல் மூலம எம பியாக நியமிக்கப்பட்டதை பார்க்‌

எனவே இனியும மௌனமாக இருக்க முடியாது.

இந்த அரசை கவிழ்த்து ஆட்சிக்கு வரக்கூடிய சக்தியுள்ள ஸ்ரீ ல சு கட்சிக்குள் நீதியும, நியாயமும நிலைத்திருக்க வேண்டும.

இப்படி திரு அநுரா பண்டாரநாயக்க குறிப்பிட்டுள்ளார்,

(ல-ற)


மதுரஸதுல் பாரீ
அரபுக் கல்லூரி

மேற்படி மத்ரஸாவில் சேர்ந்து கற்க விருமபுவோர் 1990-03-31 ஆம் திகதிக்கு முன்பு அதிபருக்கு விண்ணப்பிக்கவும-

அதிபர்

மத்ரஸதுல் பாரீ அரபுக் கல்லூரி,
புஹாரி மஸ்ஜித் மாவத்தை,
வெலிகாமம-



டெரஸோ ஷிப்ஸ்
TERRAZZO (CHIPS)

★ வெள்ளை சிமெந்து
★ புட்லோ தண்ணீர் உட்புகாத சிமெந்து
★ கலர் பவுடர்
★ பித்தளை - அலுமினியம பட்டி
★ யூனியன் மோட்டிஸ் ஒற்றை - இரட்டை

- அசையும கதவுகளுக்கான பூட்டுக்கள் (இங்லிஷ்)
(Union Mortice Lock)
ரூ 16/- மேல்

ரூம்சன்ஸ்

443- பழைய சோனகத் தெரு-
கொழும்பு-12
தொலைபேசி- 434411 — 431511



இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி இல. 1613. வெளியீட்டு திகதி 16 மார்ச் 1990-

DINAPATHI. 5, Gunasena Mawatha, Colombo 12 -
P.O. Box 1613